# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உஉ | விய—ஐப்பசி 1946—அக்டோபர் | மலர் எ |


தமிழ்வாழ்க

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

5—10—'46, சனிக்கிழமை, மாலை 5-30 மணிக்கு, திருவாளர். S. இராமச்சந்திர பத்தர், B. A., அவர்கள் தலைமையில் இச்சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கீழ்க் கண்ட முடிபுகள் ஒரே மனதாக நிறைவேறின.

1. நிகழ இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் நமது கல்வி அமைச்சர் தமது தனிச்சொற்பொழிவைத் தமிழிலேயே ஆற்றி, இப்பல்கலைக் கழகத்திற்கன்றி ஏனையவற்றிற்கும் நல்வழிகாட்ட முன்வந்திருப்பதை இச்சங்கம் பெரிதும் போற்றுகின்றது.

2. சென்னைச் சாத்திரியார் குழு (Sastri's Committee) வெளியிட்டுள்ள கலைச்சொற்களில் பெரும்பகுதி வாயில்நுழையாத ஆங்கில, வடமொழிச் சொற்களாய் இருப்பதுடன், பிழைமலிந்தும் இருப்பதால், அவற்றைத் திருத்தியமைக்க அடியிற்கண்ட பெயர்களைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது. அவர்களாவார்:– T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M.A., B.L., M.O.L., அ. இராமசாமிக்கவுண்டர், M.A.,L.T., புலவர். ஞா. தேவநேயப் பாவாணர், B.O.L., ரா. பி. சேதுப் பிள்ளை, B.A.,B.L., சாமி. வேலாயுதம் பிள்ளை, B.A.,L.T., T. S. நடராசபிள்ளை, B.A.,B.L., R. K. விசுவநாதன், M.A., S. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T., அ. முத்தையா, M.A., சிவசைலம் பிள்ளை, M.A., L.T., M. S. சபேசய்யர், M. சண்முகசுந்தர முதலியார், M.A., டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph.D.

3. இவ்வாறு ஒரு குழுவை அமைத்துச் செம்மைப் படுத்துவதன் முன் 30—9—'46 'இந்து' என்னும் நாள் இதழில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்கேற்ப அச்சொற்களைக் கட்டாயமாக்குவது பெருந்தீமையும் வருத்தமும் பயக்கும் என இச்சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.

கருந்திட்டைகுடி,
14—10—'46.

A. Y. அருளாநந்தசாமி நாடார்,
தலைவர்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை
### கலைமகள் விழா

விய புரட்டாசி 10 (26—9—46) வியாழக்கிழமை முதல் தொடர்ந்து பத்து நாட்களும் மாலை 5-30 மணிக்குச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் கீழ்க்குறித்தவாறு திருக்குறள்பற்றிய விரிவுரைகள் நிகழ்வுற்றன.

| பொருள்கள்: | திருவாளர்கள்: |
|---|---|
| பாயிரம்: | வித்துவான் அ. பொன்னணுக்களத்தில்வென்றார் அவர்கள், செங்கரையூர். |
| துறவறவியல்: | க. ப. கண்ணன் அவர்கள் புலவர் மாணவர். |
| அரசியல்: | வித்துவான் N. இராமநாதன் அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர். |
| அங்கவியல்: (முற்பகுதி) | நா. குப்புசாமி அவர்கள் புலவர் மாணவர். |
| (பிற்பகுதி) | சி. குருசாமி அவர்கள் புலவர் மாணவர். |
| ஒழிபியல்: | அ. சின்னண்ணன் அவர்கள் புலவர் மாணவர். |
| கற்பியல்: | பண்டித, ந. ரா. சுந்தரராசன் அவர்கள் ,, |
| களவியல்: | வித்துவான். வி. அ. அரங்கசாமி அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர். |
| இல்லறவியல் | வித்துவான். நாட்டார் சிங்கம் அவர்கள். |

திருக்குறள் பற்றிய பொதுக் கருத்துக்கள்
S. இராமச்சந்திரப்பத்தர் B.A., அவர்கள் தஞ்சை.

இங்ஙனம் நிகழ்ந்த சொற்பொழிவுகளைப் பல அன்பர்கள் கேட்டுப் பயன் பெற்றனர்.

## வருந்துகின்றோம்.

நம் சங்கப் புரவலருள் ஒருவரும் தஞ்சைக் கூட்டுறவு மின்னியக் கப்பதிப்பக அமைச்சரும் ஆகிய திருவாளர் த. பொ. கை. அழகிரி சாமிப் பிள்ளை அவர்களின் வாழ்க்கைத்துணைநல மாய மீனாட்சி யம்மை அவர்கள் 2—10—'46-ஆம் நாள் இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள் என்பதனைக் கேட்டு மிகமிக வருந்துகின்றோம். மனைவியை இழந்து வருந்தும் நம் புரவலரவர்கட்கும் பிள்ளைகட்கும் எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றோம். கணவனையே தெய்வமாகக் கருதி வழிபட்டுக் கடனாற்றிச் சிறப்பித்த இவ்வம்மை யின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுத்திளைக்க இறைவனை வழுத்துகின்றோம்.

பொழிலாசிரியர்.

தமிழ் அறிஞர் கழகம், சென்னை.

# தமிழ் மொழிக்கு ஆபத்து.

**தமிழ் அறிவியற் சொற்களால் தமிழ்மொழிக்குக் கேடு செய்கின்றனர் !**
**தமிழ் மக்களே விழிப்பாயிருங்கள் !!**

1. சென்னை அரசாங்கத்தார் கலைச்சொற்களைத் தமிழில் முதன் முதல் வெளியிட்டுள்ளனர். அவை 100-க்கு 99-பங்கு சமக்கிருதமே.

2. அதன் பின்னர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 'கலைச்சொற்கள்' என்ற புத்தகம் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அவை பெரும்பாலும் தமிழ்ச்சொற்களே. அந்நூல் முன்னர் மாகாண முதல் அமைச்சராயிருந்த C. இராசகோபாலாச்சாரியாரவர்கள் ஆதரவும் பெற்றது.

3. மேற்கண்ட இரண்டு வகைச் சொற்களையும் பயன்படுத்திப் புத்தகங்கள் எழுதலாமென்று அரசாங்க உத்திரவு முளது.

இதனால் ஒரு பையன் ஓர் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு இரண்டு வகையான தமிழ்ச் சொற்கள் தெரிந்துகொள்ள வேண்டியவனாகின்றான்.

4. மூன்றாவதாகத் திரு. சீனிவாச சாத்திரியார் தலைமையில் கூடிய குழுவினர் வேறொரு வகைக் கலைச் சொற்களை ஆக்கியுள்ளனர். இச் சொற்களைப் பெரும்பாலும் சமக்கிருத மூலத்திலிருந்தே ஆக்கியும், சில ஆங்கிலச் சொற்களை அப்படியே வைத்துக் கொள்ளவும் இவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

எனவே இனி ஒரு பையன் மூன்றுவகையான சொற்கள் தெரிந்து கொள்ள வேண்டியவனாகின்றான்.

5. பொருள் தெரிந்துகொள்ள வேண்டியதற்குப் பதிலாக நிகண்டு படிப்பதுபோல் சொற்களையே படிக்கவேண்டியதா யிருக்கும். அதனால் கலைப்பாடக் கல்வியில் ஒரு சிறிது முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

இனிய ஓசையுடைய தமிழ்மொழியில் உரத்த, இனிமையற்ற சொற்கள் புகுந்து தமிழ் நலத்தைக் கெடுக்கும் என்பது திண்ணம்.

6. இந்தி பொது மொழியானால் தமிழ்மொழிக்கு எத்தனை கேடோ அத்துணைகேடும் தமிழ் அறிவியற் சொற்களைச் சமக்கிருத மயம் ஆக்குவதனால் உண்டாகும்.

**விழிமின் ! தமிழ் மக்களே ! எழுமின் !! ஆபத்தை விலக்குமின்!!!**

## தமிழுக்கு வடசொல்லடியாகப் பிறந்த கலைச் சொற்களா ?

தமிழ் நாட்டின் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழிலேயே எல்லாக்கலைகளும் இப்போது கற்பிக்கப்படுகின்றன. எல்லா ஆங்கிலக் கலைச் சொற்களுக்கும் சரியான தமிழ்க் கலைச் சொற்களைச் சில ஆண்டுகட்கு முன்பு சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்தார் ஆக்கினர். அவைகளைக் "கலைச்சொற்கள்" என்ற பெயருடன் நூல்வடிவாக 1938-ல் வெளியிட்டனர். அச்சொற்கள் பலராலும் பாராட்டப்பட்டுப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

இது நிற்க,

1940-ஆம் ஆண்டு சூன் திங்கள் சென்னை அரசினர் உயர்திரு. சீனிவாச சாத்திரியாரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினை அமைத்துத் தென்னிந்திய மொழிகளில் கலைச் சொற்களை எப்படிக் கொள்வது என்பதைப் பற்றிய முடிபு செய்யுமாறு ஆணையிட்டனர்.

திரு. B. N. சீல் (பம்பாய் கல்வி இலாகா உதவி டைரெக்டர்) வேண்டுகோளின்படி இந்தியா முழுவதிலும் கலைச் சொற்களை எப்படிப் பயன்படுத்துவதென்பதை ஆராச்சி செய்ய இந்திய மத்தியக் கல்வி ஆலோனை போர்டார் ஓர் உட்கழகத்தை அமைத்தனர்.

அந்த உட்கழகத்தினருக்குப் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். சென்னை, கலைச்சொற் கழகத்தினரும் தம் முடிபைத் தெரிவித்தனர். ஆனால் இந்திய மொழிகளில் கலைச் சொற்களை ஆக்கும் போது, அக்காரியத்திற்காக, இந்திய மொழிகளை எப்படிப் பெரும் பிரிவுகளாகப் பிரிப்பது என்பதைப்பற்றி ஒரே மனதான கருத்துக்கள் கிடையா. அது கீழே தரப்பட்ட குறிப்புக்களிலிருந்து எளிதிற் புலனாகும்.

அலகாபாத் பல்கலைக்கழக உதவித் தலைவர் பண்டிட் அமரநாத் ஜா முதலில் எல்லாம் ஆங்கிலச் சொற்களாக இருத்தலே நன்று என்று கூறினர். பிறகு உட்கழக முடிபுக்கு மாறாக, (1) வடமொழிச் சார்புச் சொற்கள் (2) பேர்ஸியோ அராபிச் சொற்கள் (3) திராவிடச் சொற்கள் என மூவகையாகச் சொற்களைத் தொகுக்கலாம் என்று முடிபு கட்டினர்.

அன்சுமான்-இ-டிராக்கி-இ-உருது (Anjuman-E–Traqqi-E Urudu) வின் செயலாளரான டாக்டர் அப்துல் ஹேக் (Dr. Abdul Haque) பல ஆண்டுகளாக உஸ்மானியா பல்கலைக் கழகத்திலே செய்யப்பட்டு வரும் கலைச்சொல் வேலையில் பெரிதும் ஈடுபட்டவர். அவர் சொற்களை (1) உருதுவை யொட்டிய சொற்கள் (2) திராவிடச் சொற்கள் என இரண்டாகப் பிரிக்கலாம் எனத் தெரிவித்திருக்கிறார். அவ்வகைப் பகுப்பு அனைவருக்கும் உடன்பாடாக இல்லையேல் (1) உருது

(2) சமக்கிருதம் (3) திராவிடம் என்ற மூவகைப் பிரிப்பு ஏற்றது எனக் கூறியிருக்கிருர்.

உஸ்மானியப் பல்கலைக் கழக வேதிநூல் பேராசிரியர் டாக்டர் மொசப்புருடின் குரேஷி (Dr. Mozaffaruddin Quraishi) என்பவர் சொற்களை (1) ஆரிய மொழிச் சொற்கள் (2) திராவிடச் சொற்கள் என்று இருவகையாகப் பகுக்கலாம் என்று எழுதியிருக்கிருர்.

மத்திய கல்வி ஆலோசனைப் போர்டார் நியமித்த உட்கழகத்தினர் சொற்களை (1) ஹிந்துஸ்தானியிலிருந்து எடுத்தாளப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சொற்கள் (2) திராவிடச் சொற்கள் எனப் பாகுபடுத்தலாமென்று முடிவு செய்தனர்.

எனவே பெரும்பாலான வடநாட்டு அறிஞர்களும், உட்கழகத்தினரும், தமிழைத் தலைமையாகக் கொண்ட திராவிட மொழிகளுக்குத் தனி இடத்தையும், செல்வாக்கையும், உரிமையையும் தந்துள்ளனர்.

ஆனல் தென்னுட்டு மொழிகட்கெனச் சென்னை அரசினர் ஏற்படுத்திய குழுவினர் சொற்களை ஆக்கும்போது (1) உருதுமொழிக்குப் பெர்சியன் அராபி மொழிச்சொற்களை அடியாகக் கொண்ட சொற்களையும் (2) தென்னிந்திய மொழிகட்கு வடசொற்களை அடியாகக் கொண்டசொற்களையும் கொள்ளவேண்டுமென முடிபு செய்தனர்.

பம்பாய், கல்வி இலாக்காவின் டெபுடி டைரக்டர் திரு. B. N. சீல் என்பவரும் தென்னிந்திய மொழிகட்கு வடசொல்லடிச்சொற்களையே ஆக்கிக்கொள்ளலாம் என்று கருதினர்.

இவை எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்த மத்திய கல்விஆலோசனைக் கழகத்தார் வடநாட்டு மொழிகட்குப் பெர்சியன் அராபி மொழிச் சொற்களை அடியாகக் கொண்ட கலைச் சொற்களையும், தென்னுட்டு மொழிகட்கு வடமொழிச் சொல்லடியாகப் பிறந்த சொற்களையும் ஆக்குவதென முடிவுசெய்தனர். அரசினர் அம்முடிபை ஒத்துக்கொண்டு, மேல் வேலையைத் தொடங்கி உள்ளனர்.

மேலே கூறப்பட்ட செய்திகளிலிருந்து எண்ணுதற் கேற்ற பொருள் ஒன்று நம் அகக்கண்ணெதிரே வருகிறது. வட நாட்டு அறிஞர்களான — நம் உடன் பிறந்தார்கள் நமக்கு நெடுந்தூரத்திலிருப்பவர்கள் — திராவிடமொழிகளில் தொன்மைவாய்ந்த தமிழின் உயர்வையும் தூய்மையையும் முழுதும் அறிய வாய்ப்பு இல்லாதவர்கள் — தென்னுட்டு மொழிகட்குத் தனிச்சிறப்பு தந்துள்ளார்கள். நமக்கு "மொழி உலகில்" தன்னுட்சிதர விரும்புகிருர்கள். தென்னுட்டினர் அடங்கிய சென்னைக் குழுவினரோ தமிழ் முதலிய தென் மொழிகளை வடமொழிக்கு மீளா அடிமைகளாக ஆக்கவேண்டுமென விரும்புகின்றனர், இஃது என்ன கொடுமை! அக்குழுவிலுள்ள தமிழ் பேசும் உறுப்பினர்கட்குத் தமிழ், மொழியாகத் தெரியாவிட்டாலும், தமிழின் சிறப்பியல்புகள் கூடத் தெரியாதா? தமிழ் வேறு மொழியின் உதவியின்றித் தனித்தியங்கும் தொன்மொழி என்பது

கூடத் தெரியாதா? கடந்த ஆயிரம் ஆண்டுகளாக வடமொழியால் சீர்குலைக்கமுடியாத சிறந்த மொழி தமிழ் என்பது தெரியாதா? தமிழிடைப்பிறந்து வடமொழியால் சிதைக்கப்பட்ட கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளைப்போல் இல்லாமல் தனிச் சிறப்புடன் இன்றும் விளங்கும் மொழி தமிழ் என்பதை அவர்கள் அறியார்களா? கலைச்சொற்கள் என்ற போர்வையுடன் பல வட சொற்களைத் தமிழில் புகுத்திவிட்டால் தமிழ் அன்னை உடல் தேய்ந்து, நாறி, நாளடைவில் அழிந்து விடுவாள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?

தமிழனின் உயிர், நல்ல குருதி ஓட்டம் முதலியவை தனித் தமிழிலேதான் இருக்கின்றன என்பதை உணரார்களா? உணர்ந்தும் இவ்வகை முடிபு செய்திருப்பார்களானால் அவர்கள் தமிழ் நாட்டின் தமிழன்னையின் பகைவர்கள் அல்லரா? தமிழை வடமொழிக்கு அடிமையாக்கும் இம்முயற்சியைத் தமிழ் உலகம் கண்டு வாளாவா இருக்கப்போகிறது? தமிழரின் ஆக்கத்திற்கு நீங்காத் துணையாக நிற்கும் தமிழ் அன்னைக்கு ஒருவகை ஊறும் உண்டாகாதவாறு காத்தல் தமிழ்ப் புதல்வர்களின் கடமை அல்லவா?

வடநாட்டறிஞர் முடிபுகளையும், தமிழ் நாட்டினர் சிலர் அடங்கிய சென்னைக் கழக முடிபையும் எண்ணும்போது தமிழ்ப் பழம் பாட்டொன்று நினைவுக்கு வருகிறது. அது வருமாறு:

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றுஇருக்க வேண்டா:
உடன்பிறந்தே கொல்லும் வியாதி:—உடன்பிறவா,
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்:
அம்மருந்து போல்வாரும் உண்டு."

## இனிச் செய்ய வேண்டுவது.

ஆகையால் தமிழர்களே! தமிழில் வழங்குதற்கு, தமிழ்ச் சொற்களாகவும் தமிழ்ச் சொல்லடியாகப் பிறந்தனவாகவும் உள்ள கலைச் சொற்களே ஏற்புடையவை. "கலைச் சொற்கள்" என்ற நூலில் கண்ட தமிழ்க் கலைச்சொற்களையும், வேறு ஆக்கக் கூடிய, ஆக்க வேண்டிய தமிழ்ச் சொற்களையும் தவிர வேறு எச்சொற்களையும் தமிழராகிய நாங்கள் கண்ணெடுத்தும் பாரோம் என்பதைச் சென்னை அரசினருக்கு முடிபுகள் மூலம் தெரிவியுங்கள்.

சென்னை அரசாங்கக் கலைச்சொற் கமிட்டி உறுப்பினர்களைப் பாருங்கள்!

இவர்களில் ஒருவரேனும் தமிழருண்டோ? ஐயகோ!

இதைவிடக் கொடுமை வேறு என்ன?

தமிழில் கலைச் சொற்கள் அமைப்பதற்குத் தமிழர் ஒருவர்கூட அகப்பட வில்லையா?

உறுப்பினர்கள் கீழ்வருமாறு:

1. உயர்திரு. வி. எஸ். சீனிவாச சாத்திரியார், (தலைவர்)
2. கே. சுவாமிநாதய்யர், ஆங்கிலப் பேராசிரியர், சென்னை இராசதானிக் கல்லூரி (அமைச்சர்)
3. டாக்டர் சி. ஆர். ரெட்டி, எம். எல். சி.
4. ஆர். எம். ஸ்டாதம், C. I. E. கல்வி இலாகா டைரெக்டர்.
5. எச். சி. ஸ்டாக், மாக்மில்லன் கம்பெனி.
6. ஏ. டேனியல், தலைமையாசிரியர், கிறித்தவ உயர்நிலைப்பள்ளி, குண்டூர்.
7. டி. சூரிய நாராயணு, பிரின்சிபால், அரசாங்க ஓவியக் கல்லூரி.
8. வித்துவான். ஜி. டி. சோமயாஜி, ஆந்திரா பல்கலைக்கழகம்.
9. டி. சி. சீனிவாசய்யங்கார், M.L.C. (மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில்.)
10. என். வெங்கட்டராமையர், தலைமையாசிரியர், செமோரின் காலேஜ், உயர்நிலைப்பள்ளி, கள்ளிக்கோட்டை.
11. வி. இராஜகோபாலய்யர், தலைமையாசிரியர், போர்டு உயர் நிலைப் பள்ளி, கொள்ளேகால்.
12. டி. இராம பிஷ்ஷோதி, அரசினர் காலேஜ், உயர்நிலைப் பள்ளி, மங்களூர்.
13. திருவாட்டி. சி. கே. கௌசல்யா, மேரி இராணி கல்லூரி.
14. இராவ்பகதூர் அனந்த பத்மநாப ராவ், பிச்சாண்டார் கோவில், திருச்சி ஜில்லா.
15. டாக்டர் மகம்மது அப்துல் ஹக், பிரின்சிபால், அரசினர் மகம் மதியர் காலேஜ், சென்னை.

இவர்களில் 1 (தலைவரும்) 2 அமைச்சரும், 9, 10, 11, 14 எண்ணுள்ள உறுப்பினர்களும் ஆகிய அறுவரும் சமஸ்கிருதப் பற்றுடையவர்கள் என்பதைப் பெயரால் அறிவீர்கள். இவர்களால் கலைச் சொற்கள் சமஸ்கிருத மயமாகும் என்பதில் என்ன தடை? தமிழ் நாட்டில் கலைச்சொல் அமைப்பதற்குத் திருவாளர்கள்: மறைமலையடிகள், S. சோமசுந்தர பாரதியார், T. S. நடராச பிள்ளை, சுவாமி விபுலானந்தர், R. P. சேதுப்பிள்ளை, கி. இராமலிங்க முதலியார், அ. சிதம்பரநாதர், சாமி. வேலாயுதம் பிள்ளை, T. இலக்குமண பிள்ளை, தேவநேயப் பாவாணர், அருள் தங்கையா, A. முத்தையா மு. சி. பூரணலிங்கம் பிள்ளை முதலியோர் இருப்பது தெரியாமலா போயிற்று? தமிழ் மக்களே! இன்னும் உறங்காதீர்கள்! மொழிக்கு வரும் கேட்டினைத் தடுக்க முன்வாருங்கள்!!

# தமிழில் கலைச் சொற்கள்

அ. முத்தையா, எம். ஏ.,
பொருளாதார உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

நாடெங்கும் இப்போது ஒரு புத்துணர்ச்சி உண்டாயிருக்கிறது. நம் தேச மொழிகளை வளர்த்து, அம்மொழிகள் மூலமாகவே எல்லாக் கலைகளையும் மாணவர்கட்கும், பொதுமக்கட்கும், உணர்த்தவேண்டுமென்பதே அப் புத்துணர்ச்சியின் விளைவாகும். ஏறக்குறைய நூறாண்டுகளாக ஆங்கில மொழியைக் கற்று, அதன் வாயிலாகவே ஒருசிலர் கலைகளை அறிந்து வந்திருக்கின்றனர், அந்த ஆங்கில அறிஞர்களுக்குப் போதிய தாய்மொழிப் பயிற்சி இல்லாமையால் அவர்களுடைய கலையறிவு மக்கட்குப் பயன்படாமற் போய்விட்டது. ஏனெனில் மக்களுக்குத் தெரிந்த தாய்மொழிகளில் தம் அறிவைத் தெரிவிக்கும் ஆற்றல் அவர்கட்கு இல்லை. அதனால்தான் நாட்டின் அறிவு வளர்ச்சி தடைப்பட்டு விட்டது. நம் நாட்டில், அயல் மொழியாகிய ஆங்கிலத்தில் எண்ணுவதும் எழுதுவதுமான பழக்கம் உண்டானமையால் வேறு நாடுகளிற் போல், உலகப் பேரறிஞர் சமீபகாலத்தில் பலர் தோன்றுவதற்கில்லை.

மாணவர்பாடும் பெரும் பாடே. பல ஆண்டுகள் ஆங்கில மொழி வன்மை பெறுவதற்காகவே செலவிடப்படுகின்றன. ஆங்கில மொழியில் கற்கும் கலை அறிவு, தேர்வுகளில் வெற்றிபெறப் பயன்படுவதேயன்றி, கற்பவர் உள்ளத்திற் புகுந்து பல வேலைகட்கும் நாளும் வாழ்க்கையில் பயன் ஆவதில்லை.

இக் காரணங்களால்தான் கலையறிவை மாணவர்கட்கும் பொது மக்கட்கும் அந்தந்த நாட்டுப் பகுதியில் வழங்கும் தாய்மொழி வழியாகவே புகட்டவேண்டுமென அறிஞர் சிலர் உய்த்துணர்ந்தனர். அதன் பயனாகத்தான் தாய்மொழிகளின் வழியே கலையறிவைப் புகட்டவேண்டும் என்ற ஒரு முயற்சி இப்போது உண்டாயிருக்கிறது.

இதற்குக்கூட எதிர்ப்பு இருப்பது விந்தையே! இதற்கு இரு வகையினருடைய எதிர்ப்பு இப்போது இருக்கிறது. ஒரு வகையினர் ஆங்கில மொழியின் அடிமைகள்: மற்றவர் வடமொழிப் பிரியர். "காக்கை வெளிதென்று சொல்வாரும், தாய்க்கொலை சால்புடைத் தென்பாரும்" இருப்பரெனக் குமரகுருபர அடிகள் சொல்லியுள்ளவாறு விளங்குபவர்கள் இவ் விருதிறத்தினரும்.

ஆங்கிலச் சொற்களை அப்படியே கொள்ளவேண்டுமென்பவர் கூறுபவை இவை :—

(1) கலையறிவு ஆங்கிலமொழி மூலம் வருவதால் அச் சொற்களைக் கொள்வது நல்லது.

(217-ம் பக்கம் பார்க்க.)

# சான்ஞேர்க் கணி

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., தஞ்சை.

சான்ருண்மையெனும் சொல், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை என்ற சால்பு நற்குணங்கள்யாவும் குறைவின்றி ஒருதலையாக நிரம்பி வாய்த்தலை உணர்த்தும், எனவே பெருஞ் சால்பெனும் பண்புக் குணங்களும் பொருந்திய பெற்றிமையுடையோர் சான்ருேரெனப் பெறுவர். நல்லனவாய குணங்களெல்லாம் சான்ருேரிடத்து இயல்பாயிருக்க வேண்டுமென்று அரும்புலவராம் முதற் பாவலர் 'கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து, சான்ருண்மை மேற்கொள்பவர்க்கு' என்று தெள்ளத் தெளிய விளங்க வைத்தார். ஆகவே, வாழ்க்கையை நெறிப்படுத்தற்கு மாந்தரனைவரும் சான்ருேராக முயறல்வேண்டு மாதலான், சான்ருேர்க்குரிய சீரணியாதென ஈண்டு நோக்கற்பாலது.

(2) யாவர் மாட்டும் பணிவுடையராய், சிறுமையு ணீங்கிய இன்சொல் வழங்குதல், மாந்தர்க்கேற்ற அணியென்று திருவள்ளுவனுர் 'பணிவுடைய னின்சொல னுதலொருவற், கணியல்ல மற்றுப்பிற' எனக் கூறிப் போந்தார். அழகும் அழகு பற்றிய மதிப்பும் தரத் தக்கவல்ல பொன்னினு மணியினுமாய பிறஅணி, அணியல்ல என்பதை வற்புறுத்தவே ஆசிரியர் மேலைக் குறளின்கண் அணியெனும் சொல் 'ஆதல் ஒருவற்கணி' 'அணியல்லபிற' என இருமருங்குஞ் சென்றியைய அமைத்த மென்மை அக்குறள் அணியுறுத்திய தென்பதறி யற்பாற்று. வாழ்க்கை நலத்திற்கென்றே நன்கு அமைந்துள்ள அறம் 'மனத்துக்கண் மாசிலனுதலனைத்தறன்' என்றதினுலும் 'அழுக்கா றவா வெகுளி யின்னுச்சொன் னுன்கு, மிழுக்கா வியன்ற தறம்' என்றதினுனும் மனத்தூய்மையும் மன மொழிகளின் தூய்மையு மென்பது புலனுகின்றது. 'கண்ணுலே பொருந்தி இனிதாக நோக்கி மனத்தோடே பொருந்திய இன்சொல் வல்லவனுயின், அதுதானே அறமாம்' என்பது 'முகத் தானமர்ந்தினிது நோக்கி யகத்தானு, மின்சொலினதே யறம்' என்ற வள்ளுவரது வாய்மொழியால் நன்குணரப்படுதலான், மாந்தர்க்குச் சிறந்த அணி, யாவர் மாட்டும் நன்றி பயக்கும் இன்சொல்லுடையராயிருத்த லென்பது புலனுகும்.

(3) இனி, சான்ருண்மை மேற்கொள்ளும் மாந்தர்க்குரிய சால்பு என்பதன் தன்மைகளை ஈண்டு உணரத்தக்கது.

'அன்பு நாணெப்புரவு கண்ணேட்டம் வாய்மையோ
டைந்து சால்பூன்றிய தூண்'

'நாணென்னு, நன்மை குறித்தது சால்பு'

'.........பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு'

'சால்பிற்குக் கட்டளை யாதெனிற் ருேல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்'

'இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு'

'சலம் பற்றி சால்பில செய்யார்'

'இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு'

என்பதினுனும், மற்றும்,

'ஆற்றுவா ராற்றல் பணிதலது சான்ருேர்
மாற்ருரை மாற்றும் படை'

'அணி யன்ருே நாணுடைமை சான்ருேர்க்கு'

'நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்ருேர்
பயனில சொல்லாமை நன்று'

'சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'

'மனநல நன்குடையராயினுஞ் சான்ருேர்க்
கினநல மேமாப் புடைத்து'

'நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்ருேர் கடன்'

'குணநலஞ் சான்ருேர் நலனே'

'சொல்லப் பயன்படுவர் சான்ருேர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்'

என்றதனுனும் சான்ருேர்க்குக் சிறப்பாக அணி செய்யும் சிறப்பியல்பு களையும் செயல்களையும் வள்ளுவனுர் விளங்க உணரவைத்தாங்குச் சான்ருேராதற்குரிய மாந்தரனைவரும் சால்புடையோர் சால்பு எனும் பண்பு நலன்களை அணிகலனுகப் பெற முயல்வார்களானுல், அதனுல் அவர் பெரும் பயனெய்தப் பெறுவரென்பது துணிபு. வள்ளுவப் பெரியாரின் வாய் மொழியால் யாவர் மாட்டும் கண்ணிற்கு அணிகல மாகிய கண்ணுேட்டம் கொண்டு பணிவுடையராய் இன்சொல் வழங்கி தன்பாலுள்ள அன்பின் பெருக்கை அறிவித்தலும், தீயவையும் பழி பாவங்களாகிய இழிந்த கருமங்களைச் செய்தற்கு அஞ்சுதலும், எஞ் ஞான்றும் யாவர் மாட்டும் மனத்தானும் இன்னுதவற்றைப் புரியாது மனமிரக்கம் கொள்ளுதலும், கைம்மாறு வேண்டா கடப்பாடுடைய ராய், தம்கடமைகளை நாளும் புரிதலும், ஒழுக்கத்தில் மேம்பட்டதோர் அறமாகிய வாய்மையை, கடைப் பிடித்து அதிலும் சிறப்புற்றதாகிய கொல்லாமையைச் சூழும் நெறியினைப் பேணுதலும், நன்றி பயவா வினையினை நயவாது உலகம் பழித்ததை ஒழித்து விடுதலும், பிறர் குற்றமும் தீமையும் சொல்லா நலமுடையராதலும், யாவர் மாட்டும் தாழ்ந்தொழுகி அவரது துணைக்கோடலும், தம்மினிழிந்தார் மாட்டும் தம்மைக் குறைந்தவராகக் காட்டிக் கோடலும், தமக்கு இன்னுத வற்றைச் செய்தார்க்கு இனியவே செய்தலும், இவை போன்ற பிற செயல்களும் சான்ருேர்பால் காணத்தகும் சிறப்புச் செயல்களெனப் புலனுகுதல் காணப்படும். மற்றும், சான்ருேர் மேற்கொண்டொழுகும் மூச்சீருடைய நல்லொழுக்கத்தை இளம் பெரு வழுதி யெனும்

விழுத்தகை நல்லார், 'தெய்வத்தாலோ அன்றித் தவத்தாலோ, இந்திரர்க்குரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தாலும் அதன் இனிமையைக் கருதி தனித்து உண்டலு மிலர். யாவரொடும் வெறுப்புக் கொண்டிலர்; பிறர் அஞ்சத்தகுந் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அதனைத் தீர்க்காது வாளாவிருத்தலுமிலர்; புகழிற்காகத் தம்முயிரையுங் கொடுப்பர்; பழியெனின் அதனுன் வையகம் முழுவதும் பெறினும் வாங்கார்; எத்தகைய துன்பம் வரினும் அதனுல் மனங் கவலார்; தமக்கென முயலாது பிறர்க்கென முயல்வார்; தமக்கென வாழாது பிறர்க்குரியராக வாழ்வார்; இப் பெற்றியுடையார் இருத்தலினுன் இவ் வுலகம் உளதாகின்றது என்று ஆன்ற அறிவு நலத்தொடு உண்மையியல் வழாது கூறினது பொன்னே போற் போற்றத்தக்கது; இனிய சொற்சுவை பொருட்சுவை தோய்ந்து மெய்ப்பொருள் நுட்பம் பொதுளிய அவ் வகவற் புறப்பா வருமாறு:—

'உண் டாலம்ம விவ்வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர் பிறரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக் கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே'

(4) இங்ஙனம் அன்பு, அருள், அறிவு ஆற்றல் வீறு முதலிய உய்வுறை நலன்கள் யாவும் எழில் கனிய, திகழ்ந்து நன்றறிவுங் கொண்ட வாழ்வுடையார் சான்றோரெனப் பண்டைத் தமிழ் நூல்கள் நெறியுற உணர்த்தினும், அருள் நெறியிலும், ஆண்மையும் புகழும் கொண்டு மறவாழ்க்கையிற் றலைப்பட்டார் சான்றோ ரெனவும், அறந் திரியா மறவாழ்க்கையே சால்பு எனவும் அந் நூல்களானே இனிது துணியப்படும். இதனை 'அமரின் இட்ட அருமுள் வேலிக் கல்லென் பாசறை பல் சான்றீரே' 'எயிலெறி வல்வில் ஏந்தொழில் ஆக்கத்துச் சான்றோர்' என உரைக்கப்படுதல் கொண்டு மெய்ப்பிக்கச் சாலும். இதனுன் செம்மையுறு நன்னெறியிற் செல்லும் அறவாழ்க்கையுடைய சான்றோர் ஆண்மையுடையாரல்ல ரென்பது அணுவும் பொருந்தாது. அன்னவர்க்கு, பிறன் மனை நோக்காத பேராண்மையே ஆன்ற வொழுக்கமாம். 'பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க், கறனென்றோ வான்ற வொழுக்கு' என்பது திருவள்ளுவப் பயன். புலனைந்தும் வென்றான்றன் ஆண்மையே ஆண்மையென்பது ஈண்டு கருத்திற் பதித்தல் வேண்டும்.

(5) உலக முய்ய, புகழொடு தோன்றி, தமக்கென வாழாப் பிறர்க்குரியாண்மையுடையராய் வாழும் இச் சான்றோர்க்கு அழகு தரும் சிறந்த பேரணி கலன்கள் இரண்டுள. அவைகள்,

[க] கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

[உ] சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

என்பனவே, வினைதர நிகழ்வனவாகிய கேடும் ஆக்கமும் வருதலும் உலகத்தில்லை யல்ல. இன்ப துன்பங்கள் வந்துற்ற காலை அவைகளை ஒரு பெற்றியே நோக்கி உள்ளம் அற்றம் பெருவாறு இன்புறுதலும் துன்புறுதலு மிலராய், செம்மை நெறி கடைப்பிடித்து ஒரு நிலைமைப் பட்ட உள்ளத்தினராய் நின்றொழுகுதல் தலை சிறந்தது. 'பிறந்தோருறுவது பெருகிய துன்பம்' என்றபடி மக்களுக்குத் துன்ப முண்டாதல் இயல்பாதலின், துன்பத்தை உழக்குந்தோறும் இன்பத்திலே காதலுடைத்து உயிர். துன்பம், இன்பத்திற்கு மறுதலை யாதல்,

'இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பக லமையமும் இரவும் போல
வேறுவே றியலவாகி மா றெதிர்ந்
துளவென வுணர்ந்தனை.................

என்ற அகப்பாட்டால் நன்கு விளக்கப்படுகின்றது; தெய்வத் திருவள்ளுவர் 'அறத்தான் வருவதே யின்ப மற்றெல்லாம், புறத்த புகழு மில' என மொழிந்து விதத்தலை ஈண்டு கருத்திற் பதிக்கற்பாற்று; இரு வினையும் கலந்து இன்ப துன்பம் நுகர்விக்கும் மக்கள் எவ்வகையினுன் இன்ப துன்பங்களை ஒரு பெற்றியாகக் கருதி அவற்றை வென்று நடுநிலைமையி னீங்காதொழுகி திகழ முடியு மென்பதற்கு செந்நாப் போதார், புன்னுனிப் பனியில் மன்னு மாமலை உருத் துன்னி நின்று ஒளிர் தரல் போன்று, சின் மென் மொழியால் பெரும் பொருள் தோன்ற சில செவியறிவுறுக்களை நமக்கு அளித்துள்ளார். அவற்றுள் ஒன்று,

'இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்'

என்பது; இன்பம் நுகருமிடத்து அதனை மதித்து மதியாதவன் அதனால் வரும் துன்பம் துய்க்குங் காலை வருத்த முறுதலு மில னென்பது இக் குறளின் நல்லறிவுறூஉ; எனவே ஒவ்வோர் பொருளின் நிலை, நிலையின்மை ஆகிய இவற்றினை யுள்ளவா றறிந்தால், அவ்வப் பொருள்பால் வெறுப்பு தோன்றுதல் இயல்பு; 'யாதனின் யாதனி னீங்கி யானோதல், லதனின தனினிலன்' என்பது பெரு நாவலர் வழங்கிய பொய்யாமொழி. மற்றும் 'இன்னுமை யின்ப மெனக் கொளினுகுந்தன், னென்னுர் விழையுஞ் சிறப்பு' என்ற குறள் இன்ப மெய்தும் நல்வழியைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இதற்கோரரிய வுரைவகுத்த ஆசிரியர் பரிமேலழகியார் 'துன்பந் தானும் உயிர்க்கியல் பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின் அதனை மாறுபடக் கொள்ளவே அதற்கிழிவின்றி மனமகிழ்ச்சியுடையனய், அதனுற் றொடங்கிய வினை முடித்தே விடும் ஆற்றலுடையனு மென்பது கருத்து' எனக் குறிப்புறக் கூறியது கருதற்பாற்று. இதனுன் துன்பமென்பது அறிவின் ஓர் திரிபே யென்பதூஉம் அதனை மாறி நினைக்க அஃதொழியு மென்பதும் அறியத்தக்கது. மீண்டும்

இத் தமிழ் மறை, இன்ப மடைதற்குச் சில உளவுகள் கூறி நல்லறிவு கொளுத்துகின்றது. அவற்றுள் ஒன்று, ஆசையறின் இன்பமானது இடையறுமல் வந்து மிகு மென்ற கருத்துகொண்ட 'இன்பமிடையறு தீண்டு மவா வென்னும், துன்பத்துட் டுன்பங் கெடின்' எனப்படும் குறள்வெண்பா. மற்ருென்று, பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினின்று நீங்கிய குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமை என்ற இருள் நீங்க, இன்பமுண்டாகு மென்பது. அஃது 'இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி, மாசறு காட்சியவர்க்கு' என்ற தமிழ் மறையாகும். இவ்வாறு திருவள்ளுவப் பெருந்தகையார், இன்ப துன்பங்களை ஒரு பெற்றியாக நோக்கி உள்ளம் மாருது உண்மை கண்டு நடுவுநிலைமையினிங்கா தொழுகும் நிலையை உணர்த்தும் உளவுகளைக் கூறி, துன்ப அறுதியே இன்பமாத லென்பதையும் நிறுவி, இத்தகைய இன்ப துன்பங்களினுள்ளும் யாதானு மொன்று வந்துற்றவிடத்துத் தன்னெஞ்சு கோடாமலொழுகல் சான்றோர்க்குரிய சிரணி யென வுணர்த்தியுள்ளார். அன்புடைமையும், அறிவுடைமையும், ஓர் பொருளை ஆய்ந்த துணிவுடைமையும், அவாவின்மையும் இத்தகையார் பால் நிலைபெற விருத்தலான், வினையை விட்டிருக்குந் தெளிவு இவர்பால் காணலாமென 'அன்பறிவு தேற்றமவாவின்மை யிந்நான்கு, நன்குடையான் கட்டேதெளிவு' என்றகுறட்பா உணர்த்துதல் அறியத்தக்கது.

(6) இதுகாறும் சான்றோர்க்கு அழகு என்றும் தரும் நிலையாயுள்ள நெஞ்சத்துக் கோடாமையென்ற பேரணியின் சிறப்பு அறியப்பட்டது. நெஞ்சத் திட்பச் செம்மையும் மன அமைதியுமொருங்கே பெற்ற சான்றோர்க்கு மற்ருே ரணிகலம் யாதெனின், அஃது ஒன்று கூறமுற்படுங்கால் வீக்கம் தாக்கமற்று ஒருபாற் கோடாது சீர்தூக்கியறியுமுளத்தொடு நடு நிலையுடன் வழக்குரைக்கும் நலனுடைமை. 'சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க்கணி,' என்பது வள்ளுவரது வாய்மொழி. கோலுக்குக் கூறப்பட்ட சமன் செய்தலும் சீர் தூக்கலும் சான்றோர்க்கும், சான்ருேர்க்குச் சொல்லப்பட்ட அமைதலும் ஒருபாற் கோடாமையும் கோலுக்கும் கூட்டி, சான்ருேர் சீர் தூக்கலாவது மாறுபட்ட இருவர் கூற்றுக்களை முறையால் நீதிதேர்ந்து உள்ளபடி உண்மை தேர்ந்தறிதலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை ஒளிக்காது ஒப்பச் சொல்லுதலாகவும் கருதி உரைக்கற்பாற்று. இவ்வாறு மனம் ஓரம் சாராமல் நேரடியாகச் சொல்லும் சொலல் செப்பமென உணர்க. வேண்டுதல் வேண்டாமையில்லா நடுவு நிலைமையாகிய அமைதி நிலை, சான்ருேர்க்குரிய செல்வமாதலான், 'வேண்டாமை யன்ன விழுச்செல்வம்' என்றருளிய திருவள்ளுவநாயனர், அவ்விழுமிய செல்வத்தை யளிக்க வல்ல கல்வியெனும் சமனிலைக் கருவியை 'கேடில் விழுச் செல்வங் கல்வி' யெனக் கூறியது சிந்தித்தற்குரிய அருமைப் பாடுடையதாகும். மற்றும்

......' நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு'

என்ற நாலடியா ரெனும் விழுமிய நூலில் இவ் வுண்மை தெருளற் பாலது. எனவே நடுவு நிலைமையுடையராய சான்ருேர் வீடுபெறுந் தகுதியுடைய ஞானச் செல்வ ரென்பதூஉம் ஐயுறவின்றித் துணிந்து கொள்ளப்படும்.

(7) கேடும் ஆக்கமும் ஒரு நிகரெனக் கண்டார் உள்ளத்தில் மெய்ம்மைதேறும் முறையோடு செவ்வை உரைக்கும் சொன்னிலை விளையுமாதலான், ஏற்றத் தாழ்வுமற்று ஒருவர் பக்கல் நெஞ்சங் கோடவிடாமையைச் சான்ருேர்க்குரிய சிரணியாக ஆசிரியர் திருவள் ளுவனர் கூறிப்போந்தது அறியப்படும். இவ்வாறன்றி நெஞ்சு நடு வொரீஇ, யாதானுமொருவன் ஓரங்கூறி நடுவல்லாதவற்றை செய்வா னுயின் அவன்தப்பாது கேடடைவானென்பதை 'கெடுவல் யானென்ப தறிக தன்னெஞ்ச, நடுவொரீஇ யல்லசெயின்' என்ற குறள்வெண்பா வலியுறுத்தும், மற்றும் அல்லவை செய்தார்க்கு அறமே கூற்றமாக நின்று ஒறுக்கும். நடு நிலைமையினின்ருர் ஒருகால் பண்டைவினைப் பயனுல் கேடடைய நேரினும், அதனை உலகத்தார் கேடாகக் கொள் ளாது, ஆக்கத் தோடே யெண்ணி நன்கு மதிப்பர். 'கெடுவாக வையா துலக நடுவாக, நன்றிக்கட் டங்கியான் ருழ்வு' என்பது செந் நாப் போதார் தம் பொய்யா மொழியன்ருே! ஆகவே, மாந்தரனை வரும் சான்ருேர்கள் உடன் பாடாகக் கொண்ட குணங்களை உடைய ராகி உலகத்தோடொட்ட வொழுகும் தலைமைப் பாடுடையராயின், அன்னுர்க்கு அழியாப் புகழும் இன்பமும் கைவந்து பயன்பெறுதல் கூடுமென அறிக. இப்பேரணிகளிரண்டும் இம்மைக்கும் மறுமைக் கும் பயன் தருதலான், நன்மக்கட்பேறு தக்கதோர் அணிகலமென் றெண்ணும் தாய், தன்மகனைச் சான்ருேனென்று பிறர் கூறக் கேட்ட காலத்து, தான் அவனை ஈன்ற ஞான்றினும் பெரிதும் அகமகிழ்வாள். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச், சான்ருேனெனக் கேட்டதாய்,' என்பதன் பொருளை நன்குணர்ந்தோர், சான்ருேர்க் குரிய இவ்விரண் டணிகளையும் பேணுது கைவிடுவரோ?

(8) மாந்தரை வழி நடத்துமளவாக்வுள்ள உயரியபண்புகளின் பெருக்கத்திற்கும், அறச்செயல்களின் செல்வ வளர்ச்சிக்கும், ஒருவன் தன்னைச் சான்ருேனுக்குதலே அடிப்படை; வழுவாச் சீலம் வாய்மை யிற்கொண்டு நடுவு நிலைப் புலமை யுடையராய் எவர், அருண் மிக நெஞ்சத்தோடு, செந்நெறியில் உயர்ந்த எண்ணங்களைச் செலுத்தி உள்ளத்தைப்பண்படுத்திமனவமைதி அடைவதைத் தன்குறிக் கோளா கக் கொண்டிருக்கி ருரோ, அவர், மனம் மொழி மெய்கள் கொண் டியற்றக் கூடிய செயல்களெல்லாவற்றினும் உயரிய அறிவிச்சை செயல்களைச் செய்து கொண்டிருக்கிருர். அதனுனே, இத்தகைய சான்ருேரது செயலின்பயன், ஒழுக்கமும், இன்பமும், எழிலும் வாய்ந்த வகைமாண்ட வாழ்க்கையாக இயற்கையாய். அவர்பா லமைந்து, நிலத்தினும் பெரியதாக, வானினு முயர்ந்து கடலினுமளத் தற்கரிய புத்துணர்ச்சி அவருள்ளத்தே நிலவும். இஃது குறித்து வங்கத் துதித்த செங்கதிர் வேந்தர் (Rabindranath Tagore) 'வழுவிலா முழுமையால் வயங்கு வாழ்க்கையில் ஒழுகுவார் அழகினை உன்னி

நோக்கினுல், எழுவதோ ரிதயமும் இயங்குமார்வமும் கெழுமிசேரு வகையுங் கிளருமிஞ்ஞாலமே' எனக்கூறியது ஈண்டு நினைவிற்கொண ரற்பாற்று. மற்றும் அறிவினுல் தமிழுலகிற்கு அறிவுப் பணிபுரிந்து மிளிர்ந்த அம்மூவனுர் எனும் புலவர்

"........சான்ழேர்
கடனிலே குன்றலு மிலரென்று டனமர்ந்
துலகங் கூறுவதுண்டு"

என உணர்வாற்றல் மிகக் கிளந்ததும் அறியற்பாலது. சான்ழேர் செயல் 'பிறர் நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல், சான்ழேர்கட் கெல்லாங் கடன்' எனக் கலித்தொகையில் (139) விளங்கிக் கிடத்தலுங் கண்டு கருத்திருத்தற் பாலது. எனவே அன்புடைய உள்ளத்தே அருள் பொருந்தி ஆய்ந்து ஆன்ழேர் செல்லும் வீடுபெறு செந்நெறியில் படர்ந்து வாழும் சால்பே சான்ழேர் செல்வமென்க.

'நெடிய மொழிதலுங் கடிய வூர்தலுஞ்
செல்வ மன்று தன்செய் வினைப்பயனே
சான்ழேர் செல்வமென்பது சேர்ந்தோர்
புன்கணஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வ மென்பதுவே'

என்று அறிந்தொழுகுதற்குரிய, மிளைகிழான், நல்வேட்ட ஞரது தெரிவு மொழிகளான் இவ்வுண்மை விளங்குவது இனிது புலனும். இத்திற வாழ்க்கையிற் றிளைத்தின்புற வேண்டுவோர், சான்ழேர்க் குரிய பேரணிகளை வியவாதும் பாராட்டாது மிருத்தல் எங்ஙனம் இயலும்? ஆதலான் சான்ழேர்க்கு, சீரும் சிறப்பும் ஒருங்கே தரும் உயரிய பேரணிகள்பால் பற்றுக்கொண்டு சான்ழேர் செல்வமதை சிந்தித்துணர்ந்து, அதற்குத்தக ஒழுகி நிற்றல் அறிஞர் கடனுகும்.

(9) இதுகாறுங் கூறிப் போந்தவாற்ருல், சான்ழேர்க்கு என்றும் நிலையாய சாலச் சிறப்புடைய அணி நடுவு நிலைமை யென்றும், அஃது அறத்தின் வழிநின்று ஒப்பநிற்கும் நிலைமையென்றும், நெஞ்சத்துக் கோடாமையும், அறம் தேர்ந்து வழக்குரையில் ஒருபாற் கோடாமையும் சான்ழேர் விரும்பும் அணிகலன்களென்பதும், நடுவு நிலைமை இம்மையிலும் மறுமையிலும் விழுமிய பயனைத்தரும் ஏமாப்புடைத் தென்பதும அறத்தினுல் தலையளி செய்தொழுகும் சான்ழேரது செல்வத்து இயல் நலன் எத்தன்மைத் தென்பதும் அறியப்பெற்ரும்.

# பிறநாடுகளிலுள்ள தமிழ் நூல்கள்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், பாவநாசம்.

செருமானியிலுள்ள சமக்கிருத நூல்கள் என்ற தலைப்பின்கீழ் இந்தியாவிலில்லாத சம்க்கிருத நூல்கள் பல செருமானியிலிருப்பதாயும் அவற்றை விலைகொடுத்து வாங்க இந்திய அரசாங்கம் முயற்சி செய்வதாயும் 28—8—'46 ஆம் நாள் இந்துப் பத்திரிகை தெரிவிக்கிறது. ஆங்குள்ள தமிழ் நூல்களையும் பெற முயற்சி செய்வதாகத் தெரியவில்லை. காலஞ்சென்ற திவான்பகதூர் பவானந்தம் பிள்ளை அவர்கள் பல அரிய தமிழ் நூல்களை வெளியிட்டதுடன் அமையாது செருமானியிலுள்ள சில அரிய தமிழ் நூல்களின் படியெடுத்து வரப் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்ய முன் வந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். பண்டைத் தமிழ் நூல்களையுங் கலைச்செல்வங்களையும் தமிழர் போற்றியதைவிட ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், செருமானியர் முதலியோரே பாதுகாத்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள. இன்றும் இலண்டன்மாநகரிலுள்ள மாபெருஞ் சுவடி நிலையத்தில் சேமிக்கப்பட்டுள்ள அளவு தமிழ் நூல்களைத் தமிழ்நாட்டில் கூடயாண்டும் காண்டற் கியலாவெனக் கூறலாம். அவற்றுள்ளும், செருமானி, பிரஞ்சு முதலிய நாடுகளிலுள்ள அரிய தமிழ் நூல்களை வாங்கவோ படியெடுக்கவோ பல்கலைக் கழகங்களும், சங்கங்களும், சுவடி நிலையங்களும், செல்வர்களும், தமிழன்பர்களும் முன்வரல் இன்றியமையாததாகும். யாவற்றிலும் மேலாகச் சென்னை மாகாண அரசியலாரின் பொறுப்பு பெரிதேயாகும். சமக்கிருதத்தை அகில இந்திய அரசியலார் போற்றுவதுபோலத் தமிழைச் சென்னைமாகாண அரசியலார் போற்ருவிடின் வேறு எவ்வரசாங்கம் முன்வரப் போகிறது? இதற்கான கிளர்ச்சிசெய்யவேண்டியது தமிழன்பர்களின் கடமையாகும்.

நமது தமிழ்நாட்டிலுள்ள சுவடிநிலையம் ஒன்றிலாவது ஆங்கிலப் புத்தகங்களுக்கெனச் செலவழிக்கப்படும் பெருந்தொகையில் ஒரு சிறு பங்குகூடத் தமிழ் நூல்களைச் சேமிப்பதில் செலவழிக்கப்படாதது தமிழர் தலைகுனிய வேண்டியதொரு செய்தியாகும். அச்சிடப்பட்டு வழக்கிலுள்ள நல்ல நூல்கள் யாவற்றையும் ஒருங்கே காணக்கூடிய இடம் இனி ஏற்பட்டாக வேண்டுமேயன்றி இப்பொழுதிருப்பதாகத் தெரியவில்லை. இதற்கெனச் சிறிது முயன்று (1) ஆசிரியர்களும் அவர்களியற்றிய நூல்களும் (2) நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் (3) நூல்களின் வகை தொகை (4) நூல்களின் காலவரிசை ஆகிய நான்குவகைகளில் முதல் மூன்றும் அகர வரிசையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை வெளியிட்டு, அறிஞர்களைக் கொண்டு திருத்தியமைத்து, செல்வர்களைக்கொண்டு அந்நூல்களையெல்லாம் ஓரிடத்திலாவது சேமித்துப் பார்க்க நேரின் இப்பிறவியின் பெரும்பயனுள் ஒன்று கைகூடியதாகக் கருதுவேன். அதற்கான உதவியை அறைகூவி அழைக்கின்றேன்.

# மொழி பெயர்ப்பு

திரு. இராவுபகதூர் ம. இராமச்சந்திரஞ்செட்டியார், பீ.ஏ., பி.எல்., அவர்கள் கோவை.

முன்னேற்றம் அடைந்த மொழிகளிலே முதல் நூல்களே பெரும் பான்மையாக இருக்கும். பிறமொழிகளிலிருந்து கடன்வாங்கி மொழி பெயர்த்த நூல்கள் குறைவாக இருக்கும். அவ்வித மொழிபெயர்ப்பு களிலும் முழுமொழி பெயர்ப்பும் உண்டு. கதைகளைமாத்திரம் எடுத் துக்கொண்டு அவைகளைத் திருத்தித் தம் கருத்துக்கியைய அமைத்து எழுதுவதும் உண்டு. வில்லிபாரதம், பாகவதம் முதலியவை முழு மொழி பெயர்ப்பு. ஆனால் கம்பராமாயணம் திருத்தப்பட்ட நூல். இவ்வித மொழிபெயர்ப்புக்கள் தமிழில் பிற்காலத்தில் தோன்றின.

சங்க காலத்தில் பதினெண்கீழ்க் கணக்கு, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்ற நூல்கள் முதல் நூல்களே. பின்னர் உதித்த சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும் அப்படிப் பட்ட வையே. அக்காலத்தில் வடமொழிக் கலப்பு ஒரு சிறிதே ஏற்பட் டிருந்தது. பிறகு வட நாட்டிலிருந்து சமண பௌத்த சமயங்கள் தெற்கே புகுந்தன. அப்போது அச்சமயாசாரியர்கள் தங்களுடைய மொழிகளைத் தெற்கே புகுத்தினார்கள். வடமொழியிலும் வடமொழி யைச்சார்ந்த பாலிமொழியிலும் இருந்த கருத்துக்களைத் தமிழிலே புகுத்தினார்கள். அப்போது சிந்தாமணி, உதயணன்கதை, சூடாமணி முதலிய நூல்கள் தோன்றின. இவைகளிற் காணும் கதைகள் வட நாட்டுக் கதைகள்; கருத்துக்களும் வடக்கே இருந்து வந்தன. மேலும் அவர்களுடைய சமய நூல்களாகிய பிடக நூலும், ஆருகத நூலும் வடமொழி, பாலிமொழிகளில் இருந்தன. மேருமந்தர புராணம், ஸ்ரீபுராணம் முதலியவைகள் வடமொழிகளில் சிறந்துவிளங்கின. அப்போதுதான் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாளமொழி உதித்தது. இங்கிருந்தே கலப்பு மொழிக்குத் தொடக்கம் ஏற்பட்டது.

பிறகு பௌத்த சமண சமயங்கள் அழியத் தொடங்கின. அதற் குக்காரணமா யிருந்தவர்கள் சைவ வைணவ அத்துவைத ஆசாரி யர்கள். இவர்கள் அச்சமயங்களை அழித்து வைதீக சமயங்களை நிலை நிறுத்தினார்கள். தேவாரம் பிரபந்தம் முதலிய துதி நூல்களையும் வடமொழிப் பாடியங்களையும் இயற்றினார்கள். இவர்களிலே சைவ வைணவ ஆசாரியர்கள் தமிழைச் சிறப்பாகவும், அத்துவைத ஆசாரி யர்கள் வடமொழியைச் சிறப்பாகவும் எடுத்தாண்டார்கள்.

சைவ வைணவர்கள், சமண பௌத்தர்கள்கொண்ட முறையே பிற மொழியை எடுத்துக்கொண்டார்கள். இதனாலே வடமொழிக்கலப்பு அதிகம் ஏற்பட்டது. வைணவத்தில் ஆழ்வார்கள் தூய தமிழையே போற்றி வந்தும் பின் வந்த உடையவர் போன்ற ஆசாரியர்கள் வட மொழியை அதிகமாகப் போற்றி வந்ததினால் அவரைத் தொடர்ந்த ஆசாரியர்கள் பிரபந்தத்திற்கு உரை எழுதும் போதும் தூய தமிழை

விட்டு மணிப் பிரவாளத்தைக் கைக்கொண்டார்கள். ஆகவே மற்ெறாரு மணிப்பிரவாளமாகிய வைணவ மணிப்பிரவாளம் தொடங்கிற்று.

பிறகு சோழர்கள் சமண நிலையத்தாபனங்களில் ஈடுபட்டபோது வடக்கே இருந்து வடநாட்டு அந்தணர்களைத் தெற்கே அர்ச்சகம் முதலிய ஆலயப் பணிகளுக்குக் கொண்டு வந்தார்கள். முதலில் தமிழில் ஆலய வழிபாடு இருந்தது போய் வடமொழியில் வழிபாடு ஏற்பட்டது. தேவாரம் முதலிய ஓதுவதற்கு மாறாக அவைகளை ஒட்டி 108, 1008, என்ற வடமொழிப் பெயர்களைச் சொல்லத்தொடங்கினர். இதனால் வடமொழிக்கு முன்னேற்றம் அதிகம் ஆயிற்று. வடமொழியிலிருந்து பல கதைகளையும் மொழி பெயர்க்கத் தொடங்கினர். இவைகளுக்கு முன் சிற்சில வடநாட்டுக் கதைப்பகுதிகள் தெற்கே தோன்றியிருக்கலாம். ஆனால் சோழர் காலத்தில் முழுக் கதைகளும் தமிழிலேயே ஆக்கப்பட்டன. இராமன் கதை, பாரதக் கதை சிவபுராணக் கதைகள் வைணவ புராணக் கதைகள் தமிழிலேயே உண்டாக்கப்பட்டன. கலிங்கத்துப் பரணி போன்ற ஒன்றிரண்டு முதல் நூல்களைத் தவிர ஏனைய எல்லா நூல்களும் வடமொழியிலிருந்தே எடுத்தாளப்பட்டன. மக்களுடைய மனப்பான்மை அவ்விதமாக மாறிவிட்டது. வடமொழியில் முதல் நூல் இருந்தால்தான் ஒருநூலுக்கு ஏற்றம் என்ற கொள்கையும் அக்காலத்தில் தோன்றியது. இதனைத் திருத்தொண்டர் புராணப் பாயிரத்தில்உள்ள குறிப்பினால் ஊகிக்கலாம். திருத்தொண்டர் புராணமோ சேக்கிழார் சுவாமிகளால் முதல் நூலாக அருளப்பட்டது.

அது தமிழ்நாட்டில் நடந்த சரிதத்தை ஒட்டி எழுதப்பட்டது. அதற்காக வடமொழிக்குச் செல்லவேண்டியதே இல்லை. வடமொழியில் அக்கதைகளும் இல்லை. இருந்தாலும் பாயிரத்தில் உபமன்யு முனிவர் ஏனைய முனிவர்களுக்குச் சுந்தரர் சரிதத்தைச் சொன்னார் என்று கூறப்பட்டது. அவ்விதம் கூறினால்தான் அக்காலத்தில் ஒரு நூலுக்கு மதிப்பு இருந்தது என்று அறியவேண்டும். இதனை ஆதாரமாக வைத்துக்கொண்ட சில வடமொழிப் பிரியர்கள் "உபமன்யு பக்த விலாசம்" என்று ஒரு நூல் இருந்ததாகச் சொல்லி, அதனை இயற்றியும் வைத்து விட்டார்கள். அதனை வாசித்துப் பார்த்தால் தமிழின் மொழி பெயர்ப்பு என அறியலாம்.

இது நிற்க. வடமொழிப் புராணங்களோடு தென்னாட்டுப் புராணங்களும் தமிழில் தோன்றத் தொடங்கின. சமய மேம்பாட்டிற்காகச் சிறந்த கோயில்களைக்கொண்ட ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு செய்யுட் புராணம் எழுதப்பட்டது. அக்காலத்தில் ஒரு புராணத்திற்கோ அல்லது தலத்திற்கோ வடமொழிச் சார்பு இருந்தால்தான் மதிப்பு அதிகம். அதிலும் பதினெண் புராணங்களில் ஒன்றிலாவது அத்தலம் சம்பந்தப்பட்டிருந்தால்தான் பெருமை அதிகம்.

இந்தக் கருத்து வேரூன்றி இருந்த நாளில், செய்யுளாசிரியர்கள் தங்கள் புராணங்களுக்குப் பாயிரமாக இந்தஇந்த வடமொழிப் புராணத்திலிருந்து தாம் எடுத்து மொழி பெயர்த்ததாகக் கூறவேண்டியிருந்தது. இந்த முறையிலே எல்லாத் தலபுராணங்களும் வடமொழியிலிருந்து தமிழில் ஆக்கப்பட்டவாக எழுதப்பட்டன. தமிழில் இப்போது உள்ள 500, 1000, 2000 செய்யுட்களைக் கொண்ட நூற்றுக்கணக்கான புராணங்கள்,வடமொழியில் இருந்தனவென்றால் அப்புராணங்கள் எத்தனை பெரிதாக இருக்கவேண்டும். நேற்று ஒரு ஊரில் திருப்பணி செய்த ஒரு செல்வன் சரித்திரமும் வடமொழியில் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லப்பட்டது என்று எழுதிவிடுவதுண்டு. இதனால்தான் புராணம் என்றால் இக்காலத்தில் எவரும் நம்பாத வகையில் இருக்கிறது. ஒரு காட்டாறு பெரும் புண்ணிய நதியாகவும், ஒரு செய்குன்று அல்லது ஒருமேடு முனிவர்கள் தவம் செய்த பருவதமாகவும், குச்சுவீடுகள் கொண்ட சிறு கிராமம் மாடமாளிகை கூடகோபுரங்கள் கொண்ட ஒரு பெரிய நகரமாகவும் கூறுவன இப்புராணங்கள். இவை எல்லாம் கவிகற்பனையேயன்றி வேறில்லை. உண்மையில் நாட்டு மக்களின் கருத்தை ஒட்டி அதிசயோக்திகளை முன்னிட்டு எழுதியவைகளே இப்புராணங்கள். உண்மையில் அவைகள் மொழிபெயர்ப்புகளே அல்ல என அறிய வேண்டும்.

இனி இவ்விதமான உண்மையற்ற கருத்து எதுவரை சென்றது என்று பார்ப்போம். சைவத்தில் சிறந்த தத்துவஞான நூல் சிவஞானபோதம் என்பது. அதனை இயற்றிய பெரியார் மெய்கண்டதேவர். அவர் தம் நூலில் எந்த இடத்திலும் தம் நூல் மொழி பெயர்ப்பு என்று கூறவே இல்லை. அனேக காரணங்களை எடுத்துக் காட்டி அது முதல் நூல் என்றே ஆராய்ச்சியில் வல்லுநர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்க அதனை ஒரு மொழிபெயர்ப்பு நூல்என்றே 400 ஆண்டுகளுக்குப் பின் வந்த சிவஞானமுனிவர் கூறுகின்றார். அதற்குச் செய்யவேண்டிய கதைக் கட்டுப்பாடும் ஏற்பட்டிருந்தது. சிவஞானமுனிவர் வேண்டும் என்று இந்தக்கருத்தை வெளியிடவில்லை. தம் காலத்தின் கோலத்தை அனுசரிக்கவேண்டி வந்தது. அதனால் தான் அவ்விதம் சொன்னார். அக்கூற்றும் வெகு விசித்திரமாக இருக்கிறது. ஒரு உதாரணம் கூறுவோம்.

முதல் சூத்திரத் தொடக்கத்தில்,

"ஈண்டு வடமொழிச் சிவஞான போதத்துட் கூறியவாறே பொது உண்மை என இரண்டதிகாரமாகப் பகுத்துக் கொண்டு

... .... ... ... ... ... ... ...

முதற்சூத்திரத்திற்கு வார்த்திகமாகிய பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார்.

"அவனவளது எனும் அவை.........புலவர்" எனவரும். இங்ஙனம் பாடத்தை மொழி பெயர்த்துக்கொண்டு "என்பது சூத்திரம்"

எனக் காட்டி இனி அதன் கருத்துரைக்கின்றார் என்பது சூத்திரம்; என்நுதலிற்றோ வெனின்............நுதலிற்று எனவரும்.

முன்னமே கூறியபடி மெய்கண்டதேவர் எங்கும்தாம் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்ததாகக் கூறுவிடினும் அவ்வாறு மொழி பெயர்த்ததாகவும் அது மொழிபெயர்ப்பு என்றும் இரண்டு முறை இங்கே கூறுகிறார்.

இதற்கு எங்கே ஆதாரம் என்று கேட்கவேண்டும். அக்காலத்தில் பொதுமக்களும், மடங்களில் இருந்த தம்பிரான்களும் கொண்டிருந்த எண்ணப் போக்கிற்கு மாறுபடாது உரைத்தார் என்றுதான் கூறவேண்டும். இப்பாடியத்தில் காணும் கருத்துக்களும் வடமொழிச் சமய நூல்களில் இருந்து எடுத்தவைகளே. ஆதலினால் அவைகளைத் தமிழில் தூய்மையுடன் எழுத இயலாமையினால் ஓசைமாற்றிய வடமொழிச் சொற்களாலேயே இயற்றியுள்ளார். இவருடைய உரை நடையும் வடமொழிக் கலப்பு மிகுதியும் உள்ளதினால் அதனைச் சைவ மணிப்பிரவாளமாகக் கூறவேண்டும். இப்போதோ காலமும் கருத்தும் மாறிவிட்டன. உள்ளது உள்ளபடி கூறுதலே நன்று. மொழிபெயர்ப் பல்லாதவற்றை மொழிபெயர்ப்பு எனக் கூறுதல் அடாது. ஒரு மொழிக்குப் பெருமை முதல் நூல்களேயன்றி மொழி பெயர்ப்புக்கள் அல்ல. ஆகவே இனி நமது மக்கள், மொழி பெயர்ப்புகளைக் காட்டிலும் முதல் நூல்களை எழுதுவதிலே ஊக்கம் கொள்வார்கள்.

மேலும், மணிப்பிரவாளங்களை ஆதரிப்பதற்கு மாறாகக் கூடிய மட்டில் தூய மொழியினை ஆளுதலே ஒருமொழிக்கு ஏற்புடைத்தாகும். சமீப காலத்திலும் மூன்று புது மணிப்பிரவாள மொழிகள் தோன்றி இருக்கின்றன. சென்ற 4 நூற்றாண்டுகளாகவே அரபு அல்லது உருதுத் தமிழ் ஏற்படத்தொடங்கி விட்டது. அதன் கூற்றை "நான்கு பக்கிரிகள் கதை"யில் காண்க. பிறகு கிறிஸ்தவத் தமிழ் வந்து விட்டது. அதனை விவிலிய நூலில் கண்டு கொள்க. மேலும் தற்கால ஆங்கிலத் தமிழுக்கோ எத்தனை ஆதரவு உண்டு என்று கூறவேண்டியதில்லை. தினசரிகளும் மாதப் பிரசுரங்களுமே அவைகளுக்குப் போதும். இனித் தமிழுக்கு செவ்விய நடைவருமா என்று ஐயப்படவேண்டிய நாளும் வந்து விட்டதோ! போதாக் குறைக்கு சாஸ்திரி கமிட்டி என்ற கலைச்சொல் குழுவார் ஏதோ ஒரு புதிய சிருட்டியைத் தரப்போகிறார்களாம். அது பிறப்பதற்கு முந்தியே அதற்கு வேண்டிய மருந்துகளைத் தந்து நல்ல பிறவியாகப் பிறக்கச் செய்வார்களாக.

# திருவள்ளுவரும் கங்கையாறும்

பண்டிதர். அ. கிருட்டினசாமி நாயுடு அவர்கள், பூளைமேடு.

## கங்கையைக் காணல்

1 கண்டான்; பெருங்கங்கை கண்டுவிரல் மூக்கொற்றி
உண்டோ அகன்றகடல் ஓடுவதும்—துண்டாம்
மழைஒருங்கு கூடி வழிக்கொளலும் என்றான்;
முழை ஒருங்கு நீத்த முனி.

(முழை—குகை. முழையொருங்கு நீத்த முனி—குகையில் தவம் செய்வதைவிட்ட முனிவனாகிய திருவள்ளுவர். மூக்கின்மேல் விரல் வைத்துக்கொண்டு அகன்ற கடல் ஓடுவதைப் போலவும், மேகங்கள் கூடி வழிக்கொள்வது போலவும் கங்கையை எண்ணினார்.)

2 கண்கவிழ்ந்து நோக்கினான்; கங்கைக் கரைகாணான்;
விண்கவிழ்ந்து மேவுதலைக் கண்டனன்—கண்விழித்தும்
சங்கமாம் மீனினம் சானுவின்கீழ்க் கண்டிலன்;
சங்கமடி சார்ந்துறைதல் கண்டு.

(சானு—கங்கை. நெற்றியில் கைவைத்துக் கண்ணைக் கவிழ்ந்து பார்த்தும் கங்கைக் கரையைக் காணவில்லை. கங்கையில் விண்கவிழ்ந் துறையும் அடிவானம் கண்டனன். மீன்கள் தண்ணீரின் மேல்பரப் பில் இருப்பதும் சங்குகள் அடியில் இருத்தலும் இயல்பு.)

## கங்கையின் தோற்றம்

3 ஆரா அவாவோ! அடங்காப் புலனைந்தோ!
பேரா இயற்கைப் பெருங்கதையோ—வாரா
உலகக் கவியமைப்போ! ஓர்வழிசெல் நெஞ்சோ
இலகும் எழில் கங்கை யாறு

## கங்கை உபசரித்தல்

4 ஆர்த்த அலைக்கையால் அருந்தமிழே! வம்மினென்று
போர்த்த துவலைப் புதுப்பனிநீர்—வேர்த்துடலில்
நீர்வளியால் வீசி நிறைய வமிழ்தூட்டிச்
சார் வழியால் செய்ததுப சாரம்

## கங்கையின் பாராட்டு

5 தண்டமிழ் நாட்டின் தவச்சேயே! நின்னுடலம்
கொண்டளைய உள்ளம் குளிர்ப்படைந்தேன்—மண்டலத்தோர்
என்னீரால் தம்பாவம் நீக்குவரேல் என்பாவம்
நின்னீரால் நீக்கினேன் நின்று

கங்கை உணர்தல்

6 பொன்மலேயில் தோன்றிடினும் பொன்னி யெனும்பேரை
என்மக்கள் சூட்டி இசைத்திலரால்—கொன்னே
பிறப்பி லுயர்வென்னும் பேதையர் சொல்கேட்(டு)
இறப்பச் செருக்கினென் யான்

7 பொன்கலந்த நீராய்ந்து பொன்னியெனக் காவிரியை
நன்கலர்ந்த நூலறிஞர் நாட்டினரால்—என்னே
சிறப்பி லுயர்வென்னும் செந்தமிழர் கொள்கை
இறப்ப வுணர்ந்தனன் யான்.

திருவள்ளுவர் கங்கையைத் தேற்றுதல்

8 பிறந்தகத்தைப் பேசற்க ; புக்ககமே உன்னல்
நிறந்தபயன் யானும் நினேக்கோ—கறந்துறும்ஆன்
இவ்வுலக மாயின் இயல்மடிநின் நாடென்பர்
எவ்வுலகு நிற்கிணையாம் இன்று.

(பிறந்தகம்—இமயமலேயில் மானஸ ஸரஸு: புக்ககம்—பாரத நாடு. இவ்வுலகம் பசு ஆயின் பாரதநாடு ஆவின் மடியாகும்.)

9 உலகெலாம் நின்னுட் டுணவும் உடையும்
இலகும் பெருவிளேவும் ஏற்றே—அலகிலாப்
பேரும் பணமும் பெறும்படையும் கொண்டிருத்தல்
யாரும் அறிவர் இசைந்து.

திருவள்ளுவர் கங்கைக்குப் பொன்னியெனப் பெயரிடல்

10 நின்னமிழ்தம் உண்ண நிலமகள் ஈன்றபொருள்
என்னிமித்தம் இன்றி இயலரசர்—பொன்னெனவே
ஏன்றவரை வாரிக்கொண் டேகுதலால் நின்கொடைக்கு
யான்றருவன் பேர்பொன்னி என்று.

கங்கை முப்பால்நூல் யாக்க வேண்டிக் கொள்ளுதல்

11 நாற்பொருளே நால்நூலா என்மக்கள் யாத்ததன்றி
நூற்பொருளா யாரும் நுவன்றிலர்—ஏற்பவவை
ஓர்நூலில் யாக்கவென ஒண்கங்கை வேண்டினுள்
பார்நூருய் வாழ்வைஅப் பா.

12 அப்பா ! அருந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த உன்னேப்போல்
இப்பாரில் யாரும் இருந்திலர்—ஒப்பிலாக்
காவிரிநீ ரன்ன கருமநூல் செய்தருள்வாய்
பூவிரிய நிற்கும் புகழ்.

குறிப்பு :—இச்செய்யுட்கள் திருவள்ளுவர் வெண்பா என்னும் நூலில் உள்ளன. அந்நூல் 1000 வெண்பாக்களே உடையது. திருவள்ளுவர் மதுரையில் தங்கி முப்பால் நூல் செய்தருளுவதற்கு முன்னர் நாடுகளேக் காணச்செல்கின்ருர். அங்ஙனம் செல்வதில் வடநாடு என்னும் பகுதியில், இத்தலேப்புச் செய்யுட்கள் அமைந்துள்ளன.

# வயங்கு வளியின் வளாகம்.

திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள்,
இயற்கைப் பொருட்கலைப்பகுதித் தலைவர், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் 22, மலர் 6, பக்கம் 186)

எங்கும், வெப்ப நிலையை யொட்டிய வேறுபாடுகள், குளிர்க் காலத்திலேயே, வேனிற் காலத்திலானவற்றைவிட, மிகுதியாயிருப்பன வாதலால், அக் காலத்திலேயே அமுக்கம் பொறுத்த வேற்றுமைகள் மிகுவன. ஆகவே, வயங்கு வளிக்குப் பொருட்டான தள்ளும் வலிமை, குளிர்காலத்திலேயே வேனிற்காலத்தானதைவிட மிக்கதாயிருப்பது. அதனால், குளிர்காலத்துக் கூதைகளே வேனிற்காலத்துக் கோடைகளை விட வலிமை மிக்கனவாயிருப்பன.

வயங்கு வளியைக் குறித்து இன்னொரு முக்கியமான செய்தியை இனிக் கூறலாம். அஃது, உயரத்தைப் பொறுத்தபடி வளிசெல் விரைவினளவு பேரளவுகளுக்கு வேறுபடுவதாம், என்பதே. இதை யொட்டிப் பலவாறான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள. ஆயினும் அவற்றின் விளைவாய்ப் பெறப்பட்ட முடிவுகளைக் கடினமான எண்ணு வணியின் (Mathematics) வாயிலாயன்றி விளக்கல் இயலாது. இயற்கை நிகழ்ச்சிகளை உன்னிக் காணல், எவர்க்கும் எளிதே; ஆனால் அவற்றிற்கான பொருட்டுக்களை விளக்கல், என்பது பெரும்பாலோரை யொட்டிக் கடினமேயாம்.

காற்று சிறிதளவாகவேனும் வயங்கத் துவங்கிற்றாயின். உலகப் பரப்பிலான மேடு பள்ளங்கள், அதன் கீழ்ப்பகுதிகளை, எழுந்து விழுந்து குலுங்கினபடி சுலுழும் சுழல்களைக் கொண்ட தள்ளாட்டங் களுக்கு ஆட்படுத்துகின்றன. அவ்வாறான உராய்வுகள் ஏற்படும் இடம் நிலப்பரப்பேயானமையின், அதன் அண்மையிலேயே, காற் றோட்டத்தைத் தகைக்கும்படியான பொருட்டுக்கள் மிகுதியா யிருப்பன. ஆதலால் அப் பரப்பினின்று உயரமாய்ச் செல்லச்செல்ல, முதலில், மிகை மடங்குகளிலாய்க் காற்றினது விரைவினளவு பெருகிப் போவதாகும். உலகச் சுழற்சியின் பொருட்டாய், 30° முதல் 40° வரையான கோணவளவுகளுக்கு அவை சாய்ந்துகொண்டே செல்லு மாறாயாவன. மேலே போகப்போக விரைவுப் பெருக்கத்தின் மடங்கு குறைந்துகொண்டே போகும். ஆனால் விரைவினளவு மிகுந்து கொண்டேபோகும். மிகவும் சேணானநிலையில் உலவும்முகில்களமைந்த உயரமெய்தும் வரை, விரைவினளவு மிகுந்து வருவதாகும். அதன் பிறகு அதன் அளவு, உயரம் மிகையாக, ஆக, குறைந்துகொண்டே போகும். சேணிலை கொண்ட முகில்கள் இயலும் புலங்கள், நில-கடல், மட்டத்தினின்றிருக்கும் உயரத்தைவிட இருமடங்கான உயரமடையும் வரை, வளிவயங்கும் விரைவினளவு குறைந்துகொண்டே போவ

தாகும். அவ்வுயரத்தில் அதனளவு நிலமட்டந்தானதற்கு நிகரா யிருப்பது. அவ்வுயரத்தினுக்கும் மீதாயேறி, ஏற, விரைவினளவு மீட்டும் மிகையாய்க்கொண்டு போவதாகும். அரிதாக, நிலமட்டத்தி லொன்றினின்று ஐந்நூறு மைல் உயரம் வரையிலும் அமைந்த காற்றுப்பகுதி முழுமையும், அசைவற்று நிற்றலாகும் நிலைமை ஏற் படுகிறது.

வளிவயங்கும் அளக்கர்க்கு முற்றுப்படியிலது. அவ்வழியில் ஆங்காங்கு, கண்ணறையாய்க் காணப்படும் சிற்சில திணைகளை மட்டும் புகறலே ஒல்லலாயிற்று. வளிப்பாற்பட்ட செய்திகளில் அறியப் பட்டவை கைம்மண்ணளவே என்பதையும், அறியப்படாதவை, உலகளவினவை என்பதையும் தெரியற் செய்கையோர் நன்குணர்ந்த வரே. அவரது தாளாண்மையின் விளைவாய்த் தெரியப்பட்டவாறுன கைம்மண்ணளவில், நுண் மணலொன்றின் நுண் கூறுவெனத் தக்கதையே யான் இவண் கூறலானேன். ஆயினும், பொதுமைப் பாங்கைக் கொண்டாடும் பலர், அதுவும் பொதுமதிக் கெட்டாக் கடினப்பாடா யமைந்ததெனவும், ஆகவே பயனற்ற வெறுங் கூற்றே யெனவும், இதனைக் குறை கூறுவார். மேலை நாட்டினரிடைப் பொது மக்கள் பேணும் தெரியற் செய்கை யுரைகள் என வழங்குகின்ற வாறுனவற்றை, நம் நாட்டில் அறிஞரிலும் அறிஞரானவர் மட்டுமே கற்கும்படியான நிலைமை நிலவியிருக்கிறது. இந் நிலைமையில், தெரியற் செய்கை வாயிலாயான மிகச் சிறுவரை அறிவுரையையேனும் தமிழில் தமிழரிடைப் புகுத்தல் என்பது பொதுமையை எதிர்த்ததாகும் எனக் கூறி, அதை மறுத்தல் ஏற்றதாகுமோ! பொதுமை போற்றல் என்பதைக் கத்துச் சொல்லாய்க்கொண்டு (Slogan) வெளிற்றையே விளம்பரப் படுத்தும் பொதுவியக்கங்கள் பல நம் தமிழ் நாட்டில் கூத்தாடுகின்றன; எண்மை யெனக் கூறி இறங்கும்படியான கருத்துக் களையே அவை பரப்புவன. பொதுமை சிறந்த எளிமை யென ஏமாற்றும் வறுமைப்பகட்டினும் அறிவு கூர்ந்த நுண்மை என வாய்மையினெழுகும் பொருளடக்கமே உகந்ததாம் என நந்தமிழ்ப் பொழிலைப் படிப்போராயினும் கருதுவார் என்ற திண்ணங்கொண்டு யான் இச்சிற்றுரையை அவர்முன் வைக்கத் துணிகிறேன். இக் கட்டுரையில் தெரியற் செய்கைக் கியைந்த கலைச்சொற்களான பலவற்றை யான் கையாண்டுள்ளேன். அவை யனைத்தும் தமிழ் மொழியுடன் இசைந்த ஆக்கங்களாகவே பொருந்தியிருப்பன என வற்புறுத்திக் கூறவும் துணிகிறேன். ஆகவே, எம்மொழி வாயிலா யான, உயர் கருத்தாயிருக்கு மெதையும், தமிழ் மொழிகொண்டு உரைத்தல் எளிதே யென்பது திண்ணம். ஆனல் அக் கருத்துக்களைத் தமிழரில் பெரும்பான்மையோர் ஏற்கும்படி செய்தலே கடினம் என அடியேன் எண்ணுகிறேன். நமது தமிழ் மொழியின் மெய்யெழுச்சியில் ஊக்கங்கொண்ட அனைவரும் அவ்வழியே தம் கடனாற்றும்படியாகப் பணிந்து வேண்டுகிறேன்.

(200-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி.)

(2) அநேக நாடுகளில் ஏதேனும் ஒரு மொழியைச் சேர்ந்த பல கலைச்சொற்கள், பொதுவாகவே இருக்கின்றன.

(3) நம் நாட்டு மாணவர் வெளி நாடுகட்கு மேற்படிப்புக்காகச் செல்லும்போது, தாய்மொழியில் படித்த கலைச்சொற்களுக்கு ஏற்ற சொற்களை அந்நிய நாட்டு மொழிகளில் கற்கவேண்டி யிருக்கிறது.

(4) ஆங்கிலச் சொற்களையே கொண்டால் மொழிச்சண்டைகள் இல்லாமற்போகும்.

(5) புதிதாகத் தாய்மொழிகளில் கலைச்சொற்களை அமைக்கும் வருத்தம் இல்லை.

(6) சில ஆங்கிலச் சொற்கள் வழக்கில் வந்துவிட்டன

என்பனவாம்.

இவைகட்கு மறுப்பு வருமாறு :—

(1) ஆங்கிலச் சொற்களை அப்படியே கையாண்டால் தாய் மொழி வழியாகக் கலைகளைப் புகட்டும் பயன் கிட்டாமற் போய்விடும்; ஆங்கிலச் சொற்களைச் சொல்லின் பொருள் தெரியாமல் நெட்டுருச் செய்து மாணவரும் ஏனையோரும் வழங்குவர்; தாய்மொழியில் அச் சொற்கள் இருந்தால்தான் சொற்கள் உணர்த்தும் பொருள் முழு தும் எல்லோருக்கும் எளிதில் புலப்படும்; உதாரணமாக Census (சென்சஸ்) என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம்; சென்சஸ் என்று சொன்னால் ஒரு பொருளும் துலங்கவில்லை; 'குடிமதிப்பு' என்றால் சொல்லைச் சொன்னதும் பொருளும் எளிதில் விளங்குகிறது; அறிவு எல்லோரிடையும் செவ்வையாகவும் எளிதாகவும் பரவவேண்டு மானால் அவ்வறிவு தாய்மொழிச் சொற்கள் மூலமாகத்தான் பரப்பப் படல் வேண்டும்;

ஆங்கிலச் சொற்களை இடையிட்டுத் தமிழ்ச் சொற்றொடர்கள் ஆக்கினால் அவை மிகவும் ஆபாசமாகவும், நகைப்புக்கிடமாகவும் இருக்கும்; கலைநூலில் ஆக்கக்கூடிய ஒரு சொற்றொடரை மேற் கோளாக எடுத்துக்கொள்வோம்; 'Silicon ஆனது Nitrogen, Carbon இவைகளுடன் கலக்கிறது: Silicides களை உண்டாக்கும் உலோகங் களுடனும் சேருகிறது;

இந்தச் சொற்றொடரில் ஏதாவது தலைகால் தெரிகிறதா? பொருள் விளங்குகிறதா? ஆங்கிலச் சொற்களை அப்படியே எடுத் தாண்டால் இவ்வகைச் சொற்றொடர்கள் வழியாகத்தான் கலை யறிவைப் புகட்டலாம்; இதனால் வரும் பயன் என்ன? சற்றே சிந்தியுங்கள்!

ஆங்கில மொழியின் ஒலி அமைப்பும், இலக்கண அமைப்பும், தமிழுக்கு மாறுபட்டவையாக இருப்பதால், அச்சொற்களைத் தமிழில் கலந்தால் நெய்யும் தண்ணீரும் போல நிற்குமேயொழிய, தமிழுடன் கலவா;

நாட்டின் விடுதலையை விரும்பும் பெரும்பாலார் மற்றொரு மொழிக்கும் கலைக்கும் அடிமைகளாக இருக்க விரும்ப மாட்டார்கள்;

(2) பெரும்பாலான அயல்நாட்டு மொழிகளிடையே பல கலைச் சொற்கள் பொதுவெனச் சிலர் தவறாக எண்ணுகின்றனர்; கூறு கின்றனர்; அவ்வாறான பொதுச் சொற்கள் மிகச்சிலவே; அவை கூட ஆங்கிலச் சொற்கள் அல்ல; கிரேக்க, லத்தீன் முதலிய மொழி களின் சொல்லடியாகப் பிறந்தவை பெரும்பாலும் அவை; எனவே இரண்டாவது காரணமும் பொருத்த மற்றது; மிகச்சில உலகப் பொதுக்கலைச் சொற்களைத் தமிழிலும் கொள்வதைத் தமிழ் அறிஞர் வெறுக்கவில்லை;

(3) நம் நாட்டு மாணவரில் வெளிநாடுகட்குச் செல்பவர் மிகச் சிலரே; அவர்களுடைய வசதிக்காக, கோடிக் கணக்கான மாணவர் களையும் பொது மக்களையும் ஆங்கிலச் சொற்கள் மூலம் படித்து இடர்ப்படும்படி செய்வது அநியாயம்; அநாவசியம்.

வெளிநாடு செல்பவரிலும் ஆங்கில நாட்டுக்குச் செல்லும் மாண வர்கட்குத்தான், நம் நாட்டிலும் ஆங்கிலச் சொற்கள் மூலம் படிப் பது வசதி. ஆங்கிலத்தில் கலைபயின்றவர் ஜெர்மனி, பிரான்சு, இத் தாலி முதலிய நாடுகட்கு மேற்படிப்புக்காகச் செல்லுகின்றனரே! அவர்கள் எல்லாம் அந்நாட்டு வழக்காற்றிலுள்ள கலைச் சொற்களைக் கற்றறிந்து, மேலே அறிவை வளர்க்கவில்லையா? அப்படி யிருக்கை யில் தாய்மொழிச் சொற்கள் மூலம் கலையறிவு பெற்றவர், எந்த மொழிக்கலைச் சொற்களையும் மேலறிவுக்காகத் தெரிந்து கொள்வது அத்துணைக் கஷ்டமானதா? அறிவு உணர்ச்சிதானே முக்கியம். அறிவு நிரம்பிய ஒரு கலைஞன் எந்தச் சொற்களையும், அறிவு பொது வாக இருப்பதால், எளிதில் கற்றுக் கொள்ளலாமே!

(4) மொழியின்மேல் தவறான பற்று உடையவர்கள் இருக்கும் வரையில் ஏதாவது மொழிச்சண்டை இப்போது இருக்குமானால் எதிர்காலத்திலும் இருக்கும். ஆங்கிலச் சொற்களின் ஆட்சி அதைத் தடைப்படுத்த முடியாது. ஒருகால் அச் சண்டையை மிகுதிப்படுத் தினும் படுத்தும்.

(5) இன்றியமையாத, பெரு வழக்கில் பலகாலமாக உள்ள, பிறமொழிச்சொல் எதையும் எடுத்தாளுவதைத் தமிழ் அறிஞர் எவரும் எதிர்க்கார். பிறமொழிச் சொல் குறிக்கும் கருத்து முழு வதையும் தமிழ்ச் சொல்லால் விளக்க முடியாவிட்டால் பிறமொழிச் சொல்லையே எடுத்தாளலாம்; உதாரணமாக, பாங்கு (Bank) கம் பெனி (Company), அம்பர் (Ambar) முதலிய சொற்கள் ,கைக்

கொள்ளப்பெற வேண்டுபவை; இவைகட்குத் தமிழ்ச்சொற்களை அமைக்கலாம்; எனினும் வழக்கை ஒழித்துப் புதியன புகுத்தல் இன்றியமையாததொரு வேலையல்ல; இவ்வகைச் சொற்கள் மிக மிகச் சிலவே;

மேலே ஆங்கிலச் சொற்களுக்குக் கூறிய மறுப்புரைகள் பலவும் வடசொல்லடியாகப் பிறந்த சொற்களுக்கும் பொருந்தும்;

(1) மக்களிடையே அறிவைப் பரப்பவேண்டுமானால், ஆங்கிலச் சொற்களை ஆளுவதில் உள்ள கடினம், வடமொழி முதலிய தமிழுக்கும் தமிழருக்கும் அயலான மொழிச்சொற்களை ஆளுவதிலும் உண்டாகும்; எடுத்துக்காட்டாக அரசாங்கத்தார் ஒப்பிய ஒரு பாடப் புத்தகத்தில் பொட்டாஸ், ஹரிதகிகஜம், பிரணீகரணம், புப்புச தமணி, ஊர்த்துவமகாசிரை, ஏககால சாம்மியங்கள், க்ஷேத்திரமிதி கரி, சதுர்ஹரிதகயுதி, அப்ஜ ஹரிதகிகாமிலம், மகனஜ நாடா, அவாஹசி சுக்கிலமண்டலம், அக்ஷரகணிதம், ஐக்கிய சாம்மியங்கள் விஷமபுஜ முக்கோணம், சமதூர சதுர்ப்புஜம் முதலிய சொற்கள் தரப்பட்டிருக்கின்றன; இவைகளில் ஏதாவது சொல்ல எளிதா? எண்ண எளிதா? அறிய எளிதா? இவைபோலத் தான் வடசொல்லடியாகப் பிறந்த சொற்கள் இருக்கும்;

(2) வடமொழிபோன்ற அயல்மொழிச் சொற்கள் நமது நாட்டிலும் வேறெந்த நாட்டிலும் வழக்கில் இல்லை;

(3) வெளிநாடுகட்குப் படிக்கச் செல்பவருக்கும் வடமொழிக் கலைச்சொற்களாற் பயன் இல்லை;

(4) அநாவசியமான தமிழர்—ஆரியர் பிணக்கை அதிகப் படுத்தும்;

(5) வழக்காற்றிலுள்ள மிகச்சில எளிய வடசொற்களைப் பயன் படுத்துவதைத் தமிழறிஞர் கூடாதெனக் கூறக் காணேம்;

ஆகவே, தமிழ் வளரவேண்டுமானால், பல கலைகளையும் எல்லோரும் அறிந்து பயன்படுத்த வேண்டுமானால், தமிழிலேயே தமிழ்ச் சொற்களாலேயே அவை கற்பிக்கப்படல் வேண்டும்; அதன்றி, வட சொற்களையோ ஆங்கிலச் சொற்களையோ பயன்படுத்தினால், மொழிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமூகத்துக்கும் பெருந் தீங்கு உண்டாகு மென்பதைத் தமிழ் மக்கள் அறிந்து, அப்பெருங்கேடு உண்டாகாத வாறு தடுக்கவேண்டும்.

**வாழிய செந்தமிழ்!**

## பிறமொழிச் சொற்கள் நிரம்பிய
## மூன்றுவது புதிய கலைச்சொற் பட்டி
### வெளிவரப் போவதைத் தடுத்து நிறுத்துவது தமிழர்தம் தனிப் பெருங் கடமை.

# வேண்டுகோள்

*தமிழே உயிரனையீர் !*

கலைச்சொற்களைப்பற்றி 1940-ல் 'அறிஞர் கழகம்' வெளியிட்ட அறிக்கைகள் இத்துடன் வருகின்றன.

இப்போது மூன்றுவதாக, உயர்திரு. சீனிவாச சாத்திரியார் தலைமையின்கீழ் ஏற்படுத்திய கலைச்சொல்லாக்கக் குழுவினரால் செய்யப்பட்ட 'கலைச்சொற் பட்டி' ஒன்று சென்னை அரசினரால் ஒரு மாதத்திற்குள் வெளியிடப்பெறும் என்றும், அச் சொற்களைப் பயன்படுத்திய நூல்களையே அடுத்த ஆண்டு முதல் பள்ளிகளில் பாடமாக வைப்பதற்கு ஆணை இடுவர் என்றும், 30—9—46ல் தினமணியில் வெளிவந்த அறிக்கையைப் பார்த்திருப்பீர்கள்.

இந்தப் புதிய பட்டியைக் கண்ணுற்ற தமிழறிஞர் சிலர் அடியிற் கண்டவாறு தெரிவிக்கின்றனர்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1938ல் உயர்திரு. C. இராசகோபாலாச்சாரியார் ஆதரவில் வெளியிட்ட கலைச்சொற் பட்டியிலிருந்து ஏறக்குறைய (1) 100-க்கு 30 விழுக்காடுள்ள சொற்கள் புதிய பட்டியில் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. (2) மீதியுள்ள ஆங்கில அறிவியற் சொற்கள் சிலவற்றிற்குத் தமிழ்ச்சொல்லும் சமஸ்கிருதச் சொல்லுமாகவும், (3) சிலவற்றிற்கு அப்படியே அவ்வாங்கிலச் சொற்களைத் தமிழ் வடிவமாகவும், (4) சிலவற்றிற்குச் சமஸ்கிருதச் சொல்மட்டும் (5) எஞ்சியவற்றிற்கு ஆங்கிலமும் தமிழுமான சொற்களும் தரப்பட்டிருக்கின்றன.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட 'கலைச் சொற்கள்' என்னும் நூலிலுள்ள சொற்களெல்லாம் தூய தமிழ்ச் சொற்களா யிருப்பதைக்கண்டு அழுக்காறுகொண்டே உயர்திரு. சீனிவாச சாத்திரியார் தலைமையில், தமிழ்நாட்டில் தமிழ்ப்புலமையும் கலைத்துறையறிவும் நேர்மையு மிக்க அறிஞர்களைச் சேர்க்காமல் ஒரு கழகம் அமைக்கப்பட்டது. இந்தப் புதிய கலைச்சொற் பட்டிக்குப் பொறுப்புள்ளவர்கள் ஆங்கிலப் பேராசிரியர் K. சுவாமிநாதனவர்களும், இராவ்சாஹிப், பி. ஏ., பி. எல்., S. வையாபுரிப் பிள்ளையவர்களுமாவர் எனத் தெரிகின்றோம். இந்த சாத்திரியார் கழகம் அடிப்படையாகக் கொண்ட நோக்கம் (1) பாதிக்குமேல் ஆங்கிலச் சொற்களும் (2) பெரும்பகுதி சமக்கிருதச் சொற்களும் (3) ஒரு சிறு பகுதி தமிழ்ச்சொற்களுமாக ஆக்கவேண்டுமென்பதே யாகும்.

தமிழுக்குக் கேடான இந்தச் செய்தியை அறிந்து 1940ல் சென்னைப் பல்கலைக் கழகத் துணைத்தலைவர், சர். மகம்மது உஸ்மான் தலைமையில், சென்னை, கோகலே மண்டபத்தில் ஒரு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங் கள் அப்போதே அரசினருக்கு அனுப்பப்பெற்றன.

அந்தக் கூட்டத்தின் பயன், முழுவதும் கலைச் சொற்களாயிருப்ப தற்கு மாறாக இப்போது வெளிவரப்போகும் கலைச்சொற் பட்டியில் 100-க்கு 30 விழுக்காடு தமிழ்ச் சொற்கள் இடம் பெறவும், சில தமிழ்ச் சொற்கள் ஆங்கிலச் சொற்களோடும், சமஸ்கிருதச் சொற்க ளோடும் ஒட்டி நிற்கவுமட்டுமே ஆயிற்று.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 'கலைச் சொற்கள்' என்ற நூலில் எல்லாந் தூய தமிழ்ச் சொற்களாக இருக்கின்றனவே என்ற குறையேயல்லாமல் வேறு குறை எதுவும் சாஸ்திரியார் குழு வினர் கண்டதாக இல்லை. நிற்க:

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் கலைச்சொற் பட்டியி லுள்ள சொற்களை (9—11—1938 காங்கிரசு ஆட்சியில் அரசினர் ஆணைப்படி) எடுத்தாண்ட கலைப் பாட நூல்கள் வெளிவந்து பள்ளி களில் ஏழாண்டுகளுக்குமேல் கல்வி பயிற்றப்பட்டு வருகின்றன. அதனால் இடைஞ்சல் ஒன்றும் ஏற்பட்டதாக இல்லை. எனவே சாஸ்திரியார் குழுவினரின் வேலை வீண் எதிர்ப்பு வேலையே யாகும்.

1938ல் இராசபாளையத்தில் நடைபெற்ற 40-வது அரசியல் மாநாடு 'கலைச் சொற்கள்' என்ற நூலைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பதும், சென்னை, திருவாங்கூர் பல்கலைக் கழகங்கள் அதனைப் பாராட்டிப் பொருளுதவியும் செய்தன என்பதும் நினைவு கூரற்பாலன.

### கல்வி மந்திரியார்க்கு அறிவிப்பு

தமிழ் மொழிக்குப் பள்ளிகளில் முதலிடங் கொடுக்கவேண்டு மென்று அறிக்கை வெளியிட்டு முயன்றுவரும் நம்முடைய கல்வி யமைச்சர் உயர்திரு. அவினாசிலிங்கஞ் செட்டியார் அவர்கள் வேறு தக்க அறிஞர்களைக் கூட்டித் திருத்தஞ்செய்யாமல் இந்தப் புதிய கலவைக் கலைச்சொற் பட்டியை அப்படியே அவசரப்பட்டு வெளியிடப் போவது தமிழுக்கும் தமிழர்க்கும் வழிவழிக் கேடு செய்வதாகவும், தமிழ் மக்கள் உள்ளத்தில் வெறுப்புணர்ச்சியை யூட்டி வளர்ப்ப தாகவும் முடியும்.

### சாஸ்திரியார் குழுவின் புதிய தலைவர்

சாஸ்திரியார் காலஞ்சென்றமையால் (சென்னை, நுங்கம்பாக்கம், கிருஷ்ணமாச்சாரி தெருவிலிருக்கும்) டாக்டர் T. S. திருமூர்த்தி

ஐயரவர்கள் மூன்று மாதங்கட்கு முன் தலைவராக அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் சாஸ்திரியார் கழகச் செயலைக் கண்டித்து முன் சென்னையில் நடந்த கண்டனக் கூட்டங்களில் பேசியவர்களாவர். இவர்கள் தம் தலைமையில் தமக்கு உடன்பாடாகாத பட்டியொன்று வெளிவர எப்படி இடந்தருவார்கள் என்பது எண்ணுதற்குரியதாகும். வீணே முன்பின் முரணாக நடந்துகொள்வதால் வரும் இந்தக் கெட்ட பெயரை ஏற்க வேண்டாமென்று உயர்திரு. டாக்டர் ஐயரவர்கட்கு எழுதித் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## இனி என்ன செய்ய வேண்டும்?

அன்பர்களே !

புதிய கலைச்சொற் பட்டியைத் திருத்தாமல் வெளியிடக் கூடாதென்றும், அதனால் தமிழ் மொழிக்குக் கேடுசூழ்வதாகுமென்றும், திருவாளர்கள் T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, எம்.ஏ.,பி.எல்.,எம்.ஓ.எல். அ. இராமசாமிக் கவுண்டர், எம். ஏ., புலவர் ஞா. தேவநேயப் பாவாணர், பி. ஓ. எல்., ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி., T. S. நடராச பிள்ளை, பி.ஏ.,பி.எல்., R.K. விசுவநாதன், எம்.ஏ., S. ஆறுமுகமுதலியார்,எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி. அ.முத்தையா, எம்.ஏ., திரு.சிவசைலம்பிள்ளை, எம்.ஏ., எல்.டி., எம். எஸ். சபேசஐயர், எம்.ஏ., எம். சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ.,எல்.டி, டாக்டர் அ.சிதம்பரநாதச்செட்டியார்எம். ஏ.,முதலியோரைக்கொண்ட புதியகுழுவினை ஏற்படுத்திக்கூடியவரை தமிழ்ச்சொற்களையே அமைத்துக் கலைச்சொற் பட்டியை வெளியிட வேண்டுமென்றும், சென்னைக் கல்வியமைச்சர் அவர்கட்கும் (Education Minister Govt. of Madras, Fort St. George, Madras). கல்வி இலாகா டைரக்டர் அவர்கட்கும் (Director of Public Instruction, Madras) தீர்மானவாயிலாக உடனே எழுதியுணர்த்துமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :-தீர்மானம் அனுப்பியது பற்றி எங்கட்கும் தெரிவித்தல் நன்று.

147, பவழக்காரத்தெரு,
சென்னை.
1—10—46

இங்ஙனம்:
சென்னைத் தமிழறிஞர் கழகத்தார்.

# பரத்தையிற் பிரிவு.

பண்டித. ந. ரா. சுந்தரராசன்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் 22, மலர் 6, பக்கம் 182)

அஃதொக்குமன், நீர் கூறுமாறு போலப் பரத்தையிற் பிரிவென்பது உண்மை நிகழ்ச்சி யன்றாய்த் தலைமகள் தன் ஊடலுக்கொரு தலைக் கீடாகக் கொள்வதே யாயின்

"தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயின் உணர்ந்து
தலைத்தாட் கழறல் தம்மெதிர்ப் பொழுதின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே"

எனத் தலைவிபால் பரத்தையர் தலைவனால் தாமுற்ற துன்பத்தினைக் கூறுதலுண்டென்றும், அதனைக் கேட்ட தலைவி அதுகுறித்துப் பரத்தையர்க்காகப் பிரிந்து தலைவனைக் கழறுதல் உண்டென்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் விதித்த தென்னையெனின்—நன்று கடாயினாய். இத்தகு ஐயங்களைத் தெளிந்து கொள்வதற்கு முன்னர் அதற்கு அடிப்படையாக நாம் நம் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுவதொன்றுண்டு. புலநெறி வழக்கம் என்பது தலைவன் தலைவி என்னும் தலைமக்கள் இருவர்தம் உயர்ந்த பண்புகளையும் சிறந்த அகத்துணர்ச்சிகளையும், ஒழுக்க நலங்களையுமெல்லாம் மன்பதைவாழ்க்கையின் இன்ப நலன்குறித்து எடுத்துக் காட்டாக வெளிப்படுத்திக் காட்டித் தெளித்துணர்த்துவிக்கத் தமிழ்ச் சான்றோர்கள் கண்ட ஒருதிற அமைப்புமுறையே யாகலான் தலைவியின் ஏதோ ஒரு சிறந்த பண்பினையுணர்த்துதற்கே இங்ஙனம் ஆசிரியர் விதித்தாராதல்வேண்டும் எனக் கொள்க. அற்றேல், அது தான் யாதோ கூறிக் காட்டுகவெனின்—தலைவனைத் தன்னினின்றும் பிரித்துக் கவர்ந்து கோடலாற் றன்னால் அழுக்காறு பாராட்டுதற்குரிய பரத்தையின்பக்கலும் அவள் துன்பம் அறிந்தவழி இரங்கி வருந்திப் பரிந்துபேசும் தலைவியின் அழுக்கறுத்தலில்லா விழுத்தகு பேரருட் பண்பின் திறனையே அஃதுணர்த்துமெனக்கொள்க.

அங்ஙனமாயினும்,

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே"

எனப் பரத்தையின் கூற்றாகவே வருஞ் சான்றோர் செய்யுட்களும் உளவாதலின், பரத்தையிற் பிரிவு என்பது உண்மை நிகழ்ச்சி யன்றெனல் ஒவ்வாதாம்பிறவெனின்—அற்றன்று, முன்னரே கூறியதுபோலத் தலைமக்களின் ஒழுக்க நலங்களை விளக்கும் புலநெறி வழக்கினைத் தழீஇ எழுந்த இன்னோரன்ன செய்யுட்களானும் தலைமக்களின் குண நலங்களும் பிறவும் வெளிப்படுத்தப் பெறுகின்றனவே யன்றிப் பரத்தையிற் பிரிவுண்டென்பது இவையிற்றாற்பெறப்படுமாறில்லை. என்னை

யெனின்—மேலைச்செய்யுளால் தலைமக்களின் அன்பிற்கும் ஒற்றுமைக்கும் இடையூறுய் இடைநடுவே நிற்றற்குரிய பரத்தைதானே அவர்தம் ஒற்றுமை மிக்கஅன்பொழுக்கத்தினை மிக விதந்துவியந்து பாராட்டுவதாகப் போதருகின்றமையின் என்பது. பிறவும் இங்ஙனமே யாம் மேற்கூறிய முடிபிற்குப் பிழை நேரா வகையில் ஆய்ந்தறிந் தமைத்துக் கொள்க.

நன்று கூறினிர்! பரத்தையிற் பிரிவென்பது நீர் கூறுமாறு போலத் தலைவி தன்ஊடலுக்கொரு தலைக்கீடாகக் கொள்வதேயாமாயின், தலைவன்பால் ஏன் அவள் ஊடுதல் வேண்டும்? அவர்தாம் தான் அவள் என்னும் வேற்றுமையிலர் என்றெல்லாம் பலபட உளமொத்த உயிர்க் காதலர் என்று முன்னர்க் கூறப்பட்டன ரல்லரோ? உளமொத்த அத்தகு உயிர்க்காதலருள் ஊடலுணர்ச்சி நிகழ்தல் அவர்தம் உளமொத்த தன்மைக்கு மாறுபட்டு வேற்றுமையிலர் என முன்னர்க் கூறிய அதனோடு முரணுருதோ வெனின்—அறியாது வினையினுய்! தலைமக்களின் ஒழுகலாற்றினைப் பாகுபடுத்த ஆசிரியர் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் என்றிவற்ரோடு ஊடலையும் ஒருங்கியைத்து உரைத்தமையும், வள்ளுவனுரும் புணர்ச்சி யின்பம் சிறத்தற்கு ஊடல் இன்றி யமையாததெனை அதனைப் பலபடியாக விரித்துக் கூறியவுண்மையும்பற்றிக்கருதியவழி இவ்வையம்நிகழ்தற்கிடனின்று. ஆயினும் ஊடல் நிகழ்ச்சியால் தலைமக்களின் உளமொத்த தன்மைக்கு நேரும் இழுக்கொன்றில்லை என்பது பிறவாறும் காட்டுதும். இருவர் நண்பர்கள் தம்முள் நெருங்கிப் பயிலும்வழி அவர்கள் தம்முட் சிறிது ஏற்றத் தாழ்வுடையராயினும் அவ்வேற்றத் தாழ்வுகளை மறந்து ஒரே நிலையினராய் ஒருவர் தவற்றினை மற்ருெருவர் பொறுத்துக் கோடலானும், ஒருவரை யொருவர் மதித்து ஒழுகுதலானும், ஒருவர்க்கொருவர் ஏற்றபெற்றி தாழ்ந்து பணிந்து விட்டுக் கொடுத்து நடத்தலானும், அவர்தம் நட்பின் பெருமையும் உண்மையும் நாம் உணர்ந்து கொள்ளுவதன்றி, அந்நட்பின்கண் பிழைபாடும், உயர்வு தாழ்வும், கருத்து வேறுபாடும் முதலாகக் குற்றமேதும் கொள்ளுதற்கில்லை. மற்று, அதற்குமாருக அவர்தம் இத்தகு ஒழுகலாற்ருல் அவர்களுக்குள் ஒருவரோடு மற்ருெருவரிடை யுள்ள நட்புரிமைச் சிறப்பும் அளவும் எத்துணைய என்பதனையும் நாமுணர்ந்து வியந்து மகிழ்கின்ரேம், அவ்வாறே, தலைமக்களின் காத லொழுக்கமும் ஒரு பெருநட்பே யாதலின், அவர்களிடையே நிகழும் ஊடலால் ஒருவரோடொருவரிடை அவர்க்குள்ள உரிமை யுணர்வும் அளவும், பணிந்து போதல், பிழைபொறுத்தல், மதித்தொழுகுதல், உயர்வு தாழ்வின்றி ஒருநிலையினராதல் என்றற் ருெடக்கத்து உளமொத் தார்க்குரிய ஒழுகலாறுகளே உணரப்படுமன்றி அதற்கு மாருய உளமொவ்வாத் திறம் சிறிதெனினும் கொள்ளப்படாதென்பது. இங்ஙனம் ஊடல் நிகழ்வால் தலைமக்கள் தம்முட் கொண்டுள்ள காதலுரிமையின் சிறப்பும் பிறவும் போதருதலா னன்றே,

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்" எனத்

தலைமகனும் சிறுபான்மை ஊடுவானுகக் கூறியதென்பது.

(தொடரும்.)